இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 386
சனி, 11 ஏப்ரல், 2026 |
பக்கங்கள் 18
www.ilakku.org

# பொறுப்புக்கூறலை நீர்த்துப் போகச் செய்யும் பெரும்பான்மை வாதம்

வலுசக்தி அமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிரான யதார்த்தமான தோல்வியை மையப்படுத்திய பார்வை

விதுரன்

# இலங்கையை வாட்டும் வெப்பம்: காடுகளை அழித்ததன் விளைவா?

மட்டுநகரான்





# அமெரிக்காவின் முழு அணுகுமுறையையும் மாற்றியமைத்த சமர்

வேல்ஸில் இருந்து அருஸ்

# வெடுக்கு நாறிமலையில் உள்ள மத அடையாளங்கள் பௌத்த மதத்திற்கு உரியவையா?



வெடுக்குநாறி மலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் தமிழர் தாயகமான வவுனியா மாவட்டத்தில், நெடுங்கேணி ஒலுமடு-பாலமோட்டை பகுதியில் அமைந்துள்ள பழமையான சிவன் கோவிலாகும். கிமு 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த, தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மலைக் குன்றின் உச்சியில் சிவலிங்கம் வழிபடப்படுகிறது. தொல்லியல் கட்டுப்பாடுகள் மற்றும் வழிபாட்டு உரிமைக்கான போராட்டங்கள் காரணமாக இது தற்போது சர்ச்சைக்குரிய பகுதியாக மாறியுள்ளது.

இந்த நிலையில், வெடுக்கு நாறிமலையில் உள்ள மத அடையாளங்கள் பௌத்த மதத்திற்கு உரியவை என்றும் விரைவில் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்துள்ளார். வெடுக்கு நாறிமலை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பௌத்த சாசன அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். 'வெடுக்குநாறி மலையில் உள்ள நினைவுச் சின்னங்கள் பௌத்த நினைவுச் சின்னங்கள் என்று அடையாளம்

தொடர்ச்சி: பக்கம் 16

## அதிக வெப்பநிலை: குளங்களில் நீர் வற்றி வருவதாக விவசாயிகள் கவலை



தற்போது ஏற்பட்டுள்ள அதிக வெப்ப நிலை காரணமாக குளங்களில் நீர் வற்றிய நிலையை அவதானிக்க முடிகிறது. திருகோணமலை தம்பலகாமம் பகுதியின் சேனாவள்ளி குளத்தில் இவ்வாறாக நீர் மட்டம் குறைந்து வெறும் தரையாக ஒரு பகுதி காட்சியளிப்பதனையும் காணமுடிகிறது.

வறண்ட பிரதேசமாக உள்ள போதும் விவசாய நெற்செய்கைக்கு விவசாயிகள் இந்த குளத்தின் நீரை நம்பியே இருக்கின்றனர். தற்போது அடுத்த போக செய்கைக்காக தயாராகி வருகின்றனர்.

இந்த சூழலில் அதிக வெப்பநிலையால் வறட்சி நிலை உருவாகலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. அதே நேரம் தென்மேற்கு பருவமழைக் காலத்தில் எல்-நினோ நிலை ஏற்பட்டால், வரும் செப்டம்பர் மாதம் வரை வறட்சியான காலநிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வலுசக்தி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிப்பு



தரம் குறைந்த நிலக்கரி கொள்வனவு தொடர்பில் குற்றம் சுமத்தி வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடிக்கு எதிராக பாராளுமன்றில் முன்கொணரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியடைந்துள்ளது.

பிரதான எதிர்க்கட்சிகளால் முன் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதம் நேற்று (10) இடம்பெற்று இறுதியில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக 153 வாக்குகளும் ஆதரவாக 49 வாக்குகளும் அளிக்கப்பட்டது.

இதனடிப்படையில் நம்பிக்கையில்லா தீர்மானம் 104 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக

தொடர்ச்சி: பக்கம் 16

## போர் நிறுத்தத்தின் முதல் நாளில் இஸ்ரேல் மேற்கொண்ட படுகொலை



ஒரே நாளில் இஸ்ரேலியத் தாக்குதல்களின் அலை காரணமாகத் தெற்கு லெபனானில் குறைந்தது 254 பேர் கொல்லப்பட்டும், 1,165க்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ள நிலையில், லெபனான் கடந்த வியாழக்கிழமை(09) தேசிய துக்க தினத்தை அறிவித்துள்ளது. மேலும், "இஸ்ரேலியக் கொலை இயந்திரத்தைத் தடுத்து நிறுத்த லெபனானின் அனைத்து அரசியல் மற்றும் இராஜதந்திர வளங்களையும் திரட்டுவதாக" பிரதமர் நவாஃப் சலாம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தில் லெபனான் ஒரு பகுதியாக இல்லை என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறினார். இதே நிலைப்பாட்டை அமெரிக்கத் துணை ஜனாதிபதி ஜே.டி. வேன்ஸும் ஆமோதித்து "நாங்கள் அந்த வாக்குறுதியை ஒருபோதும் அளிக்கவில்லை" என்று கூறினார்.

இருப்பினும், நாட்டின் இராணுவத் தளபதியுடன் இணைந்து போர் நிறுத்தத்திற்கு மத்தியஸ்தம் செய்த பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப், இந்த ஒப்பந்தம் லெபனானில் சண்டையை நிறுத்துவதை உள்ளடக்கியது என்று கூறியிருந்தார். "நிபந்தனைகள் தெளிவாக உள்ளன" என்று ஷெரீஃப் வலியுறுத்தியதை மேற்கோள் காட்டி ஈரானின் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி குறிப்பிட்டார். மேலும், வொஷிங்டன் போர் நிறுத்தம் அல்லது "இஸ்ரேல் வழியாகத் தொடரும் போர்" ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் அவர் எச்சரித்தார். "இரண்டையும் கொண்டிருக்க முடியாது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மக்களைப் பீதியடையச் செய்யும் 7.8 பில்லியன் பீப்பாய்கள்

ஈரான் அமெரிக்க போரின் முன்னர் உலகளாவிய எண்ணெய் இருப்பு சுமார் 8.2 பில்லியன் பீப்பாய்களாக இருந்தன. ஆறு வாரங்களாக நீடித்த ஹோர்முஸ் இடையூறு, அந்த இருப்பை ஏறக்குறைய 8.0 பில்லியன் பீப்பாய்களாகக் குறைத்துள்ளது.



முக்கியமாக இருப்புகள் வெளியிடப்பட்ட போதிலும், சில வாரங்களில் ஒரு நாளைக்கு 10 மில்லியனுக்கும் அதிகமான பீப்பாய்கள் என்ற அளவில் இந்த இருப்பு குறைப்பு வேகம் அதிகரித்து வருகிறது.

எரிசக்தி ஆய்வாளர்கள் இப்போது ஒரு வரம்பை முன்வைக்கின்றனர், 7.8 பில்லியன் பீப்பாய்கள் அதற்குக் கீழே சென்றால், இந்த அமைப்பு "உயர் விலைகள்" என்பதிலிருந்து "உண்மையான பற்றாக்குறைகள்" என்ற நிலைக்கு மாறும். சுத்திகரிப்பு நிலையங்கள் காலியாக இயங்க முடியாது.

மிதக்கும் சேமிப்புக் கிடங்குகளை அணுக நேரம் எடுக்கும். பிராந்திய ஏற்றத் தாழ்வுகள் காரணமாக, மற்றவர்களை விட ஆசியாவே முதலில் வறண்டு போகும். அந்த

தொடர்ச்சி: பக்கம் 17

## ஈரான் போரினால் வீழ்ந்த மும்பை மீன்பிடித் துறைமுகம்




1875-ல் கட்டப்பட்டதிலிருந்து, மும்பையின் சசூன் துறைமுகம், வளைகுடாவிற்கான ஒரு முக்கிய வர்த்தக நுழைவாயிலாக இருந்து, ஜவுளி, மசாலாப் பொருட்கள் மற்றும் அபின் ஆகியவற்றிற்கான ஒரு வணிக மையமாக உருமாறியுள்ளது. சமீபத்திய தசாப்தங்களில், இது மும்பையின் மீன்பிடி வர்த்தகத்தின் இதயப் பகுதியாக மாறியது. ஆனால் இன்று, அந்தத் துறைமுகம் வழக்கத்திற்கு மாறாக அமைதியாகக் காட்சியளிக்கிறது.

பொதுவாக, வலைகளை இறக்குதல், உறுமும் டீசல் இயந்திரங்கள், பனிக்கட்டிகளை இழுத்தல் மற்றும் மீன் வியாபாரிகளின் கூக்குரல்கள் என பரபரப்பாக இயங்கும் அந்தத்

தொடர்ச்சி: பக்கம் 15

## போர் எப்படித் தொடங்கியது?



போர் எப்படித் தொடங்கியது என்பதன் உள்விவரங்கள், அனைவரும் கற் பனை செய்ததை விட மிகவும் மோசமானவை. ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கான ட்ரம்பின் முடிவு குறித்து இதுவரை இல்லாத மிக விரிவான ஒரு கட்டுரையை நியூயார்க் டைம்ஸ் இப்போது வெளியிட்டுள்ளது.

பெப்ரவரி 11 இரகசியமான சூழ்நிலை அறை விளக்கக் கூட்டத்திற்காக நெதன்யாகு வெள்ளை மாளிகைக்கு வருகிறார். அவருக்குப் பின்னால் உள்ள திரைகளில் மொசாட் பற்றிய செய்திகள் காட்டப்படுகின்றன. ஷாவின் நாடு கடத்தப்பட்ட மகன் உட்பட, ஈரானின் சாத்திய மான புதிய தலைவர்களின் காணொளிக் கோர்வையை அவர் ட்ரம்புக்குக் காண்பிக்கிறார்.

தொடர்ச்சி: பக்கம் 17

 | © 2026 இலக்கு இணையம்

# இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட இடமளியோம்: சீன தூதுவர்

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழலால் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட எந்தச் சூழலிலும் இடமளிக்கப் போவதில்லை என இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.



கண்டி, அஸ்கிரிய ஸ்ரீ சந்தானந்த பௌத்த கல்லூரியில் குறைந்த வருமானம் பெறும் 350 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களிடம் பேசியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மேற்காசிய மோதல்களினால் உலகில் சில நாடுகள் தற்போது எரிபொருள் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றன. ஆனால், இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் எந்த நேரத்திலும் வழங்க சீனா தயாராக உள்ளது.

ஒருவேளை நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உருவானால், இலங்கையில் இயங்கி வரும் சீனாவின் 'சினோபெக்' நிறுவனம் ஊடாக அந்த நிலைமையை வெற்றிகரமாகக் கையாள முடியும்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவைச் சுட்டிக்காட்டிய அவர், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு சீன அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளிக்கும். மேற்காசியாவில் தற்போது ஏற்பட்டுள்ள போர்நிறுத்தம் நீடிக்க வேண்டும் என சீனா விரும்புவதாகவும், எவ்வாறாயினும் வருங்காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளவும் இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கவும் சீனா விழிப்புடன் இருப்பதாகவும் தூதுவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் மாபெரும் கையெழுத்து போராட்டம்




அமெரிக்காவினால் கியூபா மீது போடப்பட்ட மிகப் பெரிய பொருளாதார தடையை நீக்கக்கோரி இலங்கையில் கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் வவுனியா, இலுப்பையடியில் குறித்த கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டத்தினை கியூ பாவை பாதுகாப்போம் என்ற இயக்கம் மற்றும் சமூக வெகு ஜன அமைப்பும் இணைந்து ஒழுங்கு படுத்தி இருந்தது.

இதன்போது துண்டு பிரசுரங்கள் மக்களிற்கு வழங்கப்பட்டதுடன், பொதுமக்கள் பலரும் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு கையொப்பமிட்டதனை அவதானிக்க கூடியதாக இருந்தது.

## ஆசிரியர் தலையங்கம் | 11 ஏப்ரல், 2026

# ஈழம் முதல் லெபனான் ஈரான் வரை இறைமையை ஒடுக்கப் போரும் ராஜதந்திரமே

50 ஆண்டுகளுக்கு முன்பு 1976 ஈழத்தமிழர்களின் அன்றைய அரசியல் தலைமைகளில் முக்கியமானவராக விளங்கிய தமிழரசுக்கட்சியின் அக்காலத் தலைவரும் முன்னாள் காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினருமான சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் காங்கேசன்துறை முதல் யாழ்ப்பாணம் வரையிலான இறுதி ஊர்வலத்தில் யாழ்ப்பாணத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக 1977இல் பின்னர் தெரிவான வெற்றிவேலு யோகேஸ்வரன் அவர்களுடன் நடந்து வந்து கொண்டிருந்த வேளை அவர் எனக்குக் கூறினார் " இனி யாழ்ப்பாணம் லெபனான்தான்" என்று. ஏன் அவ்வாறு கூறுகின்றீர்கள் என விளக்கம் கேட்ட பொழுது இஸ்ரேல் உடைய நோக்கும் போக்கும் லெபனானின் இறைமையுள்ள நிலப்பரப்பைப் படிப்படியான போரின் மூலம் தனதாக ஆக்கிரமிப்பதேயாகும். இதே வேலையைத் தந்தை செல்வாவின் மறைவு சிங்களவர்கள் ஈழத்தமிழர் தாயகத்தை மேலும் மேலும் ஆக்கிரமிப்பதற்கான "ஈழத்தமிழர்கள் மேலான மக்கள் மேலான போரினை" அனைத்துலக சட்டங்களை மீறி நடத்துவதை ஊக்குவிக்கப்போகின்றது எனக் கூறினார். ஈழத்தமிழர்களின் கடந்த 50 ஆண்டுகால வரலாற்றை நோக்குபவர்கள் எவருக்கும் யோகேஸ்வரன் அவர்களின் அரசியல் எதிர்வு கூறல் எவ்வளவு தூரம் நடைமுறையில் உண்மையானதெனத் தெளிவாக விளங்கும்.

இன்று அமெரிக்கா-ஈரான் இடை சீனாவின் தூண்டுதலுடன் கூடிய பாக்கிஸ்தானின் ராஜ தந்திரம் 14 நாள் யுத்த நிறுத்தத்தை தற்காலிகமாக ஏற்படுத்திய போதிலும் இந்தப் போர்நிறுத்த உடன் பாட்டில் லெபனான் அடங்கவில்லையென இஸ்ரேலியப் பிரதமர் நெத்தன்யாகு லெபனான் மேல் மூர்க்கத்தனமான குண்டு வீச்சுக்கள் எறிகணை வீச்சுக்களை நடாத்தி 254 லெபனேனியர்களையும் பல லெபனேனிய வளநகரங்களையும் மக்களின் இரத்த வியர்வையின் உழைப்பில் உருவான மாடிக் கட்டிடங்களையும் வீடுகள் மாடிக்கட்டிடங்கள் தொழில் செய் கட்டிடங்கள் மேல் நெருப்பை அள்ளி வீசி லெபனானையே எரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பெயரளவில் லெபனான் இஸ்ரேல் உடன் நேரடியாகப் பேசவேண்டும் என்று எவ்வாறு 2009 இல் ஈழத்தமிழர்களின் டீபக்ரோ என ஆங்கிலத்தில் சுட்டப்படும் நடைமுறையரசு தேயூர் என ஆங்கிலத்தில் சுட்டப்படும் சட்ட ஆட்சியாக பரிணாமமடைந்து வந்த இறைமையை ஒடுக்க ஈழத்தமிழர்களின் யாழ்ப்பாண வன்னியரசுகளின் நிலப்பரப்பில் இருந்த அனைத்து உட்கட்டுமானங்களையும் இவ் வாறே தொடரச்சியாக குண்டுவீச்சுக்கள் எறிகணை வீச்சுக்கள் மூலம் தாக்கியழித்து மக்களை நிர்வாணப்படுத்தி அனைத்துவிதமான மனிதச் சித்திரவதைகளையும் போர் அற்ற சூனியப் பிரதேசமென தானே அறிவித்த பாதுகாப்பு பிர தேசங்களுக்கு மக்களை வரவைத்து இன அழிப்பு செய்து 146000 ஈழத்தமிழர்களைத் தேசமாகவே இனப்படு கொலைகளுக்கு உள்ளாக்கி ஈழத்தமிழரின் நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு அவர்களுக்கான சனநாயக அரசாங்கமென சிறிலங்கா அரசாங்கம் கடந்த 17 ஆண்டுகளாக ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு எந்தவொரு நடைமுறைத் தீர்வையுமோ அல்லது சிறிலங்காவின் மக்கள் மேலான யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கோ அல்லது சிறிலங்காவிடம் உத்தியோகபூர்வமாகச் சரணடைந்தவர்களுக்கோ அல்லது சிறிலங்காவால் வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கோ எந்தவொரு பரிகாரநீதியையோ அல்லது அந்த அனைத்துலக சட்டங்களுக்கு எதி ரான குற்றங்களை இழைத்தவர்களுக்குத் தண்டனை நீதியையோ வழங்காது தனது சிறிலங்காப் பாராளுமன்ற கொடுங்கோன்மை ஆட்சியை அந்த இனஅழிப்பைச் செய்தவர்களையே அமைச்சுக்களின் தீர்மானமெடுக்கும் அதிகாரிகளாக நியமித்து ஈழத்தமிழர்களின் இறைமையையும் தேசியத்தையும் தன்னாட்சி உரிமையையும் ஒடுக்கி அதனை சிறிலங்காவின் பாதுகாப்புக்கும் தேசிய ஒருமைப்பாட்டுக்குமான தேசிய பாதுகாப்புச் செயற்பாடாக அறிவித்து 1979 முதலான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமென புதிய விளக்கமளித்து நிகழ்நிலைச் சட்டங்களைக் கொண்டு வந்து ஊடகச் சுதந்திரத்தையும் மக்களின் சனநாயக ரீதியான எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமைகளையும் பறித்து இதுதான் தேசிய மக்கள் சக்தி அரசினதும் மாற்றத்துக்குரிய ஆட்சியென உலகுக்கு வெளிப்படுத்தி வருகிறது.

இந்நிலையில் சிறிலங்கா அவசரகாலச் சட்டத்தை அமெரிக்க இஸ்ரேல் ஈரான் போரைச் சாட்டாக வைத்து நீடிப்பது என்பது ஈழத்தமிழர்களின் அத்தியாவசிய தேவைகளை அவர்களைத் தங்களின் குடிகளாக கூறும் சிறிலங்கா அரசாங்கம் நிறைவேற்றாது விடுவதை ஏற்றக்கொள்ள இயலாதென அம்பாறை மாவட்டத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் கோடீஸ்வரன் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளமை எவ்வளவு தூரத்துக்குத் தேசிய மக்கள் சக்தி அரசிலும் ஈழத்தமிழர்கள் பாதிப்படைகின்றார்கள் என்ற சமகாலக் குரலாக உலகெங்கும் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்களால் இப்பிரச்சனை உலமயமாக்கப்பட வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது என்பது இலக்கின் கருத்தாக அமைகிறது.

ஏனெனில் தேசிய மக்கள் சக்திக்கு உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மற்றைய சிங்களக் கட்சிகளும் அவசரகாலச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததால் 137 க்கு 27 வாக்குகள் பதியப்பட்டு 110 மேலதிக வாக்குகளால் அவசரகாலச்சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஈழத்தமிழர்கள் நாட்டின் சட்டவாக்கத்தில் பங்கேற்க இயலாத இந்தச் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமை மற்றப்படாதவரை ஈழத்தமிழர்கள் சட்டரீதியாகவே இறைமையொடுக்கம் தேசிய ஒடுக்கம் அடையும் நிலை தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதால் ஈழத்தமிழரின் நீதிக்கான குரலாக உலகில் பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் செயற்பட்டேயாக வேண்டும். இதற்கான அமைப்பினை புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் தங்கள் சட்டத்துறை விற்பன்னர்களின் துணையோடு சமுகத்தையும் இளையவர்களையும் உள்ளடக்கி உருவாக்க வேண்டும் என்பது இலக்கின் வேண்டுகோளாகவுள்ளது.

இவ்வாறு இறைமையை ஒடுக்கப் போரை ராஜதந்திரமாக நேற்று ஈழத்தமிழர்களின் மேல் சிறிலங்கா பயன்படுத்திய பொழுது உலகம் மௌனமாக இருந்தமையே இன்று லெபனானில் ஈரானில் நேற்று பலஸ்தீனத்தில் பல ஆண்டுகளாக உக்ரேனில் இறைமையை ஒடுக்கப் போரும் ராஜதந்திரமாக முன்னெடுக்கப்படும் வரலாறாகத் தொடர்ந்து கொண்டிருப்பதற்கான மூலகாரணமாகிறது என்பதை உலக மக்களுக்கு புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் தெளிவுபடுத்த வேண்டிய காலகட்டமிது என்பதை இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது. ட்ரம்பின் தலைமையிலான இரண்டாவது ஆட்சிக்காலம் அமெரிக்காவில் ஆரம்பமானது முதல் அமெரிக்கா உலகின் எரிபொருள் வளத்தை தனதாக்க போரினையே ராஜதந்திரமாக முன்னெடுத்து வருவது ஈழம் முதல் இஸ்ரேல் வரையான உலக ஆக்கிரமிப்பு அரசுகளுக்கு ஊக்கசக்தியை அளித்து வருகிறது. சிறிலங்கா முதல் இஸ்ரேல் வரை தமது அயலில் வாழும் மக்களின் எல்லைகளைத் தமதாக்கி தங்களின் ஆட்சிப்பரப்பை அகலப்படுத்தல் என்பது அனைத்துலக சட்டங்களால் தடுக்கப்படாத தொடர்கதையாக நீண்டு கொண்டிருக்கிறது. ஈழத்தமிழர்களுக்கான அனைத்துலக சட்டங்கள் வழியான நீதி வழங்கப்படாத வரை உலகின் மற்றைய நாடுகளிலும் போரை இறைமை ஒடுக்கத்துக்கான ராஜதந்திரமாகப் பயன்படுத்தல் தொடர்ந்து கொண்டே இருக்குமென்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

பிரித்தானியாவின் கிறீன் கட்சியெனப்படும் பசுமைக்கட்சியின் தலைவர் சக் பொலன்சி அவர்கள் பிரித்தானிய அரசாங்கம் இஸ்ரேல் மேல் எந்தவொரு வர்த்தகக் கட்டுப்பாட்டையோ மேற்கொள்ளாது இஸ்ரேல் ராஜதந்திரிகளுக்கான சிறப்பு உரிமைகளை அனுபவிக்க அனுமதிக்கும் கட்டுப்பாடற்ற நிலையை மாற்றி இஸ்ரேல் உடனான வர்த்தக உடன்பாடுகளை மீளப்பெறுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். இப்படியான ஒரு வேண்டுகோளை பிரித்தானியத் தமிழர்களின் அரசியல் செயற்பாட்டாளர்களால் ஏன் விடுக்க இயலவில்லை என்பதே இலக்கின் இவ்வாரக் கேள்வியாக உள்ளது. ஊடகவியலாளர்கள் உள்ளதை உள்ளபடி வெளிப்படுத்தும் பொறுப்பினையே செய்யும் கடப்பாடு உள்ளவர்கள். ஆனால் சில அரசியல் செயற்பாட்டாளர்கள் ஊடக வியலாளர்களை இவற்றுக்கான தீர்வுகளையும் நீங்களே காண வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்து நடைமுறை எதார்த்தத்தை வெளிப்படுத்தும் பொறுப்பில் இருந்து விலகி அரசியல் செய்யச் சொல்வது அவ்வாறு கூறுபவர்களின் அரசியல் அறிவின் வறுமையையே காண்பிக்கிறது என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது. அரசியல் செயற்பாட்டாளர்கள் இணைந்து உங்களுக்கான ராஜதந்திரக் கவுன்சில் ஒன்றை ராஜதந்திரத்தில் அனுபவமுள்ள சமுகத்தினரைக் கொண்டு கட்டியெழுப்பி அதற்கு அமையச் செயற்படுவது ஒன்றே போரை ராஜதந்திரமாகப் பயன்படுத்தும் இன்றைய உலகில் ஈழத்தமிழர்கள் தங்களின் இறைமையையும் தேசியத்தையும் தக்கவைக்க ஒரே வழியென்பதே இலக்கின் ஆணித்தரமான கருத்தாகவுள்ளது.

**ஆசிரியர்**

 © 2026 இலக்கு இணையம்



# பொறுப்புக்கூறலை நீர்த்துப் போகச் செய்யும் பெரும்பான்மை வாதம்

## வலுசக்தி அமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிரான யதார்த்தமான தோல்வியை மையப்படுத்திய பார்வை

விதுரன்

இலங்கை பாராளுமன்ற ஜனநாயக வரலாற்றில், ஒரு அரசாங்கத்தின் தார்மீகப் பொறுப்புக்கூறலையும் அதன் நிர்வாகத் திறனையும் உரசிப் பார்க்கும் முக்கிய நிகழ்வுகளாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் அமைகின்றன.

அந்த வகையில், அண்மையில் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கை யில்லாப் பிரேரணை அரசியல் அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

நீண்ட விவாதங்களுக்குப் பின்னர், 104 மேலதிக வாக்குகளால் இப்பிரேரணை அரசாங்கத்தினால் தோற்கடிக் கப்பட்டது. வாக்கெடுப்பில் ஆதரவாக 49 வாக்குகளும், எதிராக 153 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில், 22 உறுப் பினர்கள் பங்கேற்கவில்லை.

இந்த வெற்றியானது அரசாங்கத்தின் பாராளுமன்ற பலத்தை உறுதிப்படுத்தியிருந்தாலும், முன்வைக்கப்பட்ட தரவுகளும் புள்ளிவிவரங்களும் நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு கொள்கைகள் வாக்குறுதிகள் குறித்து பாரிய கவலைகளை எழுப்பியுள்ளன.



குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மையப்பொருள், நுரைச்சோலை லக்விஜய நிலக்கரி மின் நிலையத்திற்கு தரமற்ற நிலக்கரியைக் கொள்வனவு செய்தமை மற்றும் அமைச்சரின் கடந்த கால ஊழல் குற்றச்சாட்டுகள் என்பனவாகும்.

2025 டிசம்பர் முதல் 2026 பெப்ரவரி வரையிலான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியானது, வழக்கமான தர நியமங்களை விடவும் மிகக் குறைந்த வெப்பப் பெறுமானத்தைக் கொண்டிருந்ததாக இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

வழக்கமாக இருக்க வேண்டிய 6150 கலோரி பெறு மதிக்கு பதிலாக, 4900 முதல் 5900 வரையிலான குறைந்த தர நிலக்கரி பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக நுரைச்சோலை மின் நிலையத்தில் 150 மெகாவாட்டிற்கும் அதிகமான மின் உற்பத்திப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இத்தரமற்ற நிலக்கரி இறக்குமதியால் மட்டும் நாட்டுக்கு ஏற்பட்ட நேரடி நிதி இழப்பு சுமார் 8.5 பில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. இது தனிநபர் ஒரு வருடைய அல்லது அமைச்சொன்றின் தோல்வி என்பதைத் தாண்டி, நாட்டின் தேசியப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் பாரிய நிர்வாகச் சீர்கேடாகும்.



எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகள் அமைச்சரின் தற்போதையசெயற்பாடுகளுடன்மட்டும்நின்றுவிடவில்லை. குமார ஜயகொடி இலங்கை உரக்கம்பனியின் கொள்வனவு முகாமையாளராகப் பணியாற்றிய காலத்தில், அரசுக்கு அண்ணளவாக 8.86மில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத் தியதாக இலஞ்ச அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வுப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளது.

ஊழல் குற்றச்சாட்டின்கீழ் பிணையில் இருக்கும் ஒருவர், நாட்டின் முக்கியமான அமைச்சுகளில் ஒன்றான வலுசக்தி அமைச்சராக நீடிப்பது நல்லாட்சி மற்றும் பொது நலனுக்கும் எதிரானது என்பது எதிர்க்கட்சிகளின் பிரதான வாதமாகும்.



மேலும், நிலக்கரி கொள்வனவு நடைமுறையில் பதிவு செய்யப்படாத நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டமை, கொள்முதல் காலத்தை 42 நாட்களில் இருந்து 21 நாட்களாக வேண்டுமென்றே குறைத்தமை மற்றும் முறையான தரப்பரிசோதனை ஆய்வாளர்களை நியமிக்கத் தவறியமை போன்ற முறைகேடுகள் ஆய்வு அறிக்கைகளின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதற்குப் பதிலளித்த அரசாங்கத் தரப்பினரும், வலுசக்தி அமைச்சர் ஜயக்கொடியும் இக்குற்றச்சாட்டுகளை அரசியல் காழ்ப்புணர்ச்சி எனக்கூறி நிராகரித்தனர்.

அமைச்சர் குமார ஜயகொடி தனது உரையில், கடந்த காலங்களில் நிலக்கரி விநியோகத்தில் ஆதிக்கம் செலுத்திய ‘ராஜபக்ஷ முகவர்களின்’ ஊழல் வலையமைப்பைத் தான் உடைத்தெறிந்ததால் தன் மீது போலியான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாகத் தெரிவித்தார். ‘மக்கள் பணத்தில் ஒரு சதத்தைக்கூட நான் மோசடி செய்யவில்லை, நிரூபித்தால் பதவியைத் துறக்கத் தயார்’ என்று அவர் பகிரங்கமான சவாலும் விடுத்துள்ளார்.

அதேநேரம், 2010 ஆம் ஆண்டு முதல் 2026 வரை நாட்டுக்கு வந்த 462 நிலக்கரி கப்பல்கள் குறித்து விசாரிக்க உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தலைமையில் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இது முந்தைய அரசாங்கங்களின் ஊழல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் முயற்சியாகப் பார்க் கப்பட்டாலும், தற்போதைய இழப்புகளுக்கான உடனடிப் பொறுப்புக்கூறலில் இருந்து அரசாங்கம் நழுவுவதற் கானவொரு தந்திரோபாயம் தான்.



சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோர், தமது சகபாடியான அமைச்சர் ஜயக்கொடியை தற்காத்துப் பேசுகையில், கொள்வனவு நடைமுறைகளில் அமைச்சர் நேரடியாகத் தலையிடவில்லை என்றும், தொழில்நுட்பக் குறைபாடுகளை ஊழலாகச் சித்தரிக்க வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டனர்.

‘முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல திட்டமிட்டு அமைச்சரவையைத் தவறாக வழிநடத்தியது போன்றதொரு செயல் இங்கு நடைபெற

தொடர்ச்சி: பக்கம் 15

 © 2026 இலக்கு இணையம்

# இலங்கையை வாட்டும் வெப்பம்: காடுகளை அழித்ததன் விளைவா?



மட்டுநகரான்

இலங்கையில் தற்போது காலநிலை என்பது வெப்பம் உச்ச நிலையில் உள்ளது. இந்த காலநிலை மாற்றத்தினால் பெருமளவிலான பாதிப்புகள் பல்வேறு வழிகளில் ஏற்படுகின்றன. இயற்கையின் செயற்பாடுகளை நாங்கள் தடுக்கமுடியாவிட்டாலும் அவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான வழிகளை ஏற்படுத்தமுடியும்.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்த வரையில் ஒரு காலத்தில் இயற்கை அழகினையும் பாரியளவிலான நீர் நிலைகளைக் கொண்ட பசுமையான மாகாணமாக இருந்து வந்தது. யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதும் கிழக்கு மாகா ணத்தின் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்த பகுதிகள் மட்டுமே பசுமையான பிரதேசமாகயிருந்தது. ஆனால் ஏனைய பகுதிகளில் இயற்கை முற்றாக அழிக்கப்பட்டது.



யுத்த காலத்தில் கிழக்கில் வீதிகளில் இரு மருங்கிலும் இருந்த பாரிய மரங்கள் அரச படைகளினால் அழிக்கப்பட்டன,அகற்றப்பட்டன. காடுகள் இருந்த பகுதிகள் அழிக்கப்பட்ட அப்பகுதிகளின் சில இடங்கள் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டாலும் ஏனைய பகுதிகள் வெறும் தரைகளாகப்பட்டன. வீதிகளில் செல்லும்போது ஏனைய பகுதிகள் தெரியக்கூடியவாறு பெருமளவான மரங்கள் அழிக்கப்பட்டதுடன் காடுகளும் அழிக்கப்பட்டன. தமிழர் பகுதிகளில் அன்று முன்னெடுக்கப்பட்ட இந்த செயற்பாடுகளினால் இன்று உருவாகியுள்ள காலநிலை மாற்றத்தினால் பல்வேறு கஸ்டங்களை கிழக்கு தமிழர்கள் எதிர்நோக்கிவருகின்றனர்.



சுயநலத்திற்காகவும், நகரமயமாக்கல் என்ற பெயரிலும் காடுகளை அழிப்பது பாரிய விளைவுகளை ஏற்படுத்துகிறது. மரங்கள் அழிக்கப்படும்போது வளிமண்டலத்தில் பசுமை இல்ல வாயுக்கள் அதிகரித்து, புவியின் வெப்பநிலை உயர்கிறது. இது பனிப்பாறைகள் உருகவும், கடல் மட்டம் உயரவும் காரணமாகிறது. காடுகள் இல்லாத நிலையில் வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கை இடர்ப்பாடுகள் அடிக்கடி நிகழ்கின்றன. காடுகள் அழிக்கப்படுவதால் வனவிலங்குகள் தங்கள் வாழ்விடங்களை இழந்து மனிதக் குடியிருப்புகளுக்குள் நுழைகின்றன, மேலும் பல இனங்கள் அழிந்து வருகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் கிழக்கு மாகாணத்தின் படுவான்கரை பகுதிகளில் காடுகள் பாதுகாக்கப்பட்டன, மரநடுகை திட்டங்கள் வேகமாக முன்னெடுக்கப்பட்டன. மரங்களை வெட்டுவோர்,காடுகளை அழிப்போர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன்காரணமாக பாரியளவில் இயற்கை வளம் பாதுகாக்கப்பட்டதுடன் எந்தவித இயற்கை சமநிலையினையும் பேணும் பகுதிகளாக காணப்பட்டன. அக் காலப்பகுதிகளில் விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் ஏதுவான நிலைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

யுத்த காலத்தில் கிழக்கு மாகாணத்தின் அடர்ந்த காடுகள் பெரும் பாதிப்புக்குள்ளாயின. இராணுவத் தேவைகளுக்காகவும், பதுங்கு குழிகளை அமைப்பதற்காகவும் பெருமளவிலான காடுகள் துப்புரவு செய்யப்பட்டன. அத்துடன் பாதுகாப்பு காரணங்களுக்காக பிரதான வீதிகளின் இருமருங்கிலும் இருந்த காடுகள் அழிக்கப்பட்டன. இதேபோன்று யுத்தத்தின் மறைவில் நிலவிய சட்டவிரோதச் சூழலைப் பயன்படுத்தி, பெறுமதிமிக்க மரங்கள் பெருமளவில் வெட்டி கடத்தப்பட்டன.



இதன்காரணமாக கிழக்கு மாகாணத்தின் இயற்கை சமநிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவே தொடர்ச்சியாக வறட்சியான நிலைமையினை அனுபவிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மழைபெய்தால் வெள்ள நிலைமையும் வெயில்வந்தால் கடுமையான வறட்சி நிலைமையுமே ஏற்படுகின்றதே தவிர இந்த நிலையினை எதிர்கொள்வதற்கான ஏதுவான நிலைகள் கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்தப்படவில்லை. கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களின் பகுதிகளே தொடர்ச்சியான புறக்கணிப்புகளுக்குள்ளாகிவருகின்றது. இயற்கையினை அழிப்பது என்பது ஒரு இனத்தின் இருப்பினை அழிப்பதற்கு சமமாகும். அதனை சிங்கள அரசுகள் திட்டமிட்டு காத்திரமாக செய்ததன் விளைவினை இன்று தமிழர்கள் எதிர்நோக்கிவருகின்றனர்.



கிழக்கில் இன்று எதிர்நோக்கும் யானை மனித மோதலுக்கும் இந்த காடுகள் அழிக்கப்பட்டதே பிரதான காரணமாக கொள்ளமுடியும். இன்றும் கிழக்கு மாகாணத்தின் நகர் பகுதிகளையே யானைகள் முற்றுகையிடும் நிலைமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் காரணங்களும் காடுகள் அழிக்கப்பட்ட மையும் மரங்கள் அழிக்கப்பட்டமையுமே பிரதான காரணங்களாகும்.

யுத்தம் நிறைவடைந்து 17 வருடங்கள் நிறைவடைகின்ற நிலையிலும் இன்னும் அழிந்த மீளுருவாக்கம் செய்வதற்கான எந்த செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை. இதன் காரணமாக தொடர்ச்சியான வறட்சியையும் மழைகாலங்களில் பூமிக்கு வரும் நீரை சேமிப்பதற்கான போதியளவான திட்டங்கள் இல்லாத காரணத்தினால் மழைநீரில் பெரும்பாலான பகுதி கடலுக்குள் செல்லும் நிலையே காணப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் கிழக்கு மாகாணத்தில் 28 பாரிய குளங்களும், 45 நடுத்தரக் குளங்களும், 1613 சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் காணப்படுவதுடன் இந்த குளங்களில் பாரிய குளங்கள், நடுத்தர குளங்களே அதிகளவில் இயங்கு நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. சிறிய நீர்பாசன குளங்கள் பெருமளவான குளங்கள் கைவிடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.



இதன்காரணமாக கிழக்கு மாகாணத்தில் பாரியளவிலான சுற்றுச்சூழல் பிரச்சினைகளை தமிழ் பேசும் சமூகம் எதிர்நோக்கும் நிலைமைகள் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் காணப்படுகின்றன. இயற்கை அனர்த்தங்களில் வேகமாக பாதிக்கப்படும் இடமாக கிழக்கு மாகாணம் காணப்படுகின்றது. அதிகளவான நீர்நிலைகள் உள்ள நிலை யில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதன் காரணமாக எதிர்கால சந்ததியினர் ஒரு வறட்சியான நிலைமைக்குள் தள்ளப்படும் நிலைமைகள் காணப்படுகின்றன.

கடந்த டிசம்பர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரையில் கிழக்கில் கனமழைபெய்து கடுமையான வெள்ள நிலைமைகளும் ஏற்பட்ட நிலையிருந்தது. வெள்ளத்தினால் பாரியளவிலான நஸ்டங்களும் எதிர்நோக்கப்பட்டன. இது நடைபெற்று இரண்டு மாதங்கள் கடக்கமுன்னதாகவே இன்று கடுமையான உஷ்ண காலநிலை நிலவுவதன் காரணமாக அதன்மூலம் பாரிய கஸ்டங்களை மக்கள் எதிர்நோக்கிவருகின்றனர். பூமி வறட்சிநிலையில் உள்ளது. விவசாயிகள் நீரைப்பெற்றுக்கொள்வதற்கு ஆற்று பகுதியிலிருந்து மோட்டர் வைத்து நீரைப்பெற்றுக்கொள்ளும் நிலைமைகள் காணப்படுகின்றன.

இந்த வறட்சியான நிலைமை இன்னும் சில மாதங்களுக்கு நீடிக்கும் நிலைமை காணப்படுவதனால் குடிநீரைப்பெற்றுக்கொள்வதிலும் மக்கள் கஸ்டங்களை எதிர்நோக்கும் நிலைமைகள் காணப்படுகின்றன.

இவற்றிற்கு எல்லாம் முக்கியமான காரணமாக எமது இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டமையே பிரதான காரணமாக பார்க்கப்படுகின்றது. இயற்கை என்பது மீளப்பெற முடியாத ஒரு வரம். கிழக்கு மாகாணத்தின் இயற்கை

தொடர்ச்சி: பக்கம் 17



# தலைவர் பிரபாகரனைக் காண உலக ஊடகவியலாளர்கள் கிளிநொச்சியில் திரண்ட நாள்

தீபச்செல்வன்

நடக்கிறதை கதையுங்கள் என்றொரு பதிலை ஒரு இந்திய ஊடகவியலாளரை நோக்கித் தலைவர் அவர்கள் சொல்லியிருந்தார். இன்றைக்கு 20 வருடங்களைக் கடந்த நிலையில் இன்றைய தலைமுறையினர், தலைவரின் அந்தக் குரலை தங்கள் சமூக வலைத்தளங்களில் எழுச்சியின் குரலாய், ஈழத்தின் முகமாய், நம்பிக்கையின் பெருவீச்சாய் அதைப் பயன்படுத்துகிறார்கள்.



தலைமுறைகள் தாண்டி களமாடுகிற ஒரு தலைவர், செயலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிற எம் தலைவர், இந்த உலகின் முன்பாய் பேசிய நாள் ஏப்ரல் 10. எங்களின் வீரமாக, முகவரியாக, அடையாளமாக எழுச்சியாக இன்னும் பலவாறாக வரலாற்றில் என்றும் மலர்ந்திருக்கும் அந்த நாளின் மகத்துவத்தை இப் பத்தி நினைவுகொள்கிறது.

## வரலாற்றில் 2002ஆம் ஆண்டு

ஈழத் தமிழ் மக்களின் வரலாற்றில் 2002ஆம் ஆண்டு ஒரு தனித்துவம் மிக்க அடையாள வருடம் ஆகிற்று. 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 10, தமிழர்களின் அரசியல் மற்றும் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத நாளாகப் பதிந்துள்ளது. அன்றைய நாளில் கிளிநொச்சி நகரம் ஒரு சாதாரண நகரமாக இன்றி உலகின் கண்கள் குவிந்த கவனிப்பைப் பெற்றிருந்தது. அன்றைய நாளில் உலக ஊடகங்களின் மையமாகக் கிளிநொச்சி மாறியது. சிங்கள ஊடகங்கள், இந்தியாவின் அச்சு, ஒலி, ஒளி மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள், மேலும் சர்வதேசத்தின் முன்னணி செய்தி நிறுவனங்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் கிளிநொச்சி மண்ணில் ஒரு தமிழரின் குரலைக் கேட்கக் கூடியதாக அங்கே திரண்டிருந்தன.

ஒரு தலைவரின் கருத்துகளை அறிய இவ்வளவு பெரும் அளவில் ஊடகங்கள் கூடுவது தமிழர் வரலாற்றில் இதற்கு முன் நிகழாத ஒன்று. இதைவிட ஆச்சரியமானது, இலங்கை ஜனாதிபதிகள் நடத்திய எந்த ஊடகவியலாளர் சந்திப்பிலும் கூட இவ்வளவு பெருந்திரளான பங்கேற்பு இல்லையென சிங்கள ஊடகங்களே பதிவு செய்திருப்பதும் இங்கே குறிப்பிட வேண்டிய விடயம். இதுநாள் வரை ஊடகங்கள் பத்திரிகைப் புகைப்படங்களில் பார்த்த தலைவரை, வானொலிகளில் குரலைக் கேட்ட தலைவரை நேரடியாகக் காண உலக ஊடகங்கள் பெருத்த ஆவலுடன் புலிகளின் நிர்வாக நகரில் கூடின.



## ஏ9 பாதை திறப்பு

இந்த மாநாட்டிற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாகவே வடக்கையும் தெற்கையும் இணைக்கும் ஏ9 முக்கிய சாலை திறக்கப்பட்டது. போரின் பேரழிவால், ஆக்கிரமிப்பின் கொடுஞ்செயலாக ஸ்ரீலங்கா அரசால் ஏ-9பாதை மூடப்பட்டிருந்த நிலையில் இப்பாதை திறப்பு என்பது வெறும் போக்குவரத்து வசதிக்கான மாற்றமாக அல்லாமல், ஒரு அரசியல் சைகையாகவும் பார்க்கப்பட்டது.

வடக்கில் நடைபெற்ற இந்த சர்வதேச நிகழ்வில் உலக ஊடகங்கள் நேரடியாக பங்கேற்கும் சூழல் உருவாக்கப்பட்டமையின் வாயிலாக தமிழர் தேசம் ஒரு தனித்த அரசியல் இடமாக உலகிற்கு உணர்த்தப்பட்ட தருணமாகும். இன்னும் சொன்னால் இன ஒடுக்குமுறைப் போரின் மத்தியில் எழுந்த தமிழர் தேசத்தை உலகம் நேரில் கண்ட நாள் என்றும் இதைச் சொல்லலாம்.

இதற்கு முன்னைய காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை மற்றும் நிலைப்பாடுகளை மாவீரர் நாள் உரைகளின் மூலம் மட்டுமே உலகம் பெரும்பாலும் அறிந்தது. ஆனால், இந்த மாநாடு ஒரு புதிய கதவைத் திறந்தது. முதல்முறையாக உலக பத்திரிகையாளர்கள் தங்களது கேள்விகளை நேரடியாக தேசியத் தலைவரிடம் கேட்கும் வாய்ப்பைப் பெற்றனர். இது உலக ஊடகங்களுக்கும் ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்காக, உரிமைக்காக ஆயுதம் தரித்துக் களமாடிய ஒரு தலைவரை நேரடியாக சந்தித்து உரையாடும் வாய்ப்பை உலக ஊடக நிறுவனங்கள், மிகுந்த பிரமிப்புடன் நோக்கின.

## தலைவரின் இராஜதந்திரத் திறன்

இந்த மாநாடு நடைபெற்ற காலப்பின்னணி மிக முக்கியமானது. போர் நிறுத்தம், நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகள், மற்றும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் போன்ற சூழ்நிலைகளில் இந்த சந்திப்பு நடந்தது. இதனால், இந்த நிகழ்வைத் தடுக்க முடியாத சூழல் சிங்கள அரசுக்கு ஏற்பட்டது. அதே நேரத்தில், 2001 செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் உலகம் ஆயுதப் போராட்டங்களைப் பற்றிய தனது பார்வையை மாற்றியிருந்தது. அந்த மாற்றமான உலக சூழலில், தமது அரசியல் நிலைப்பாட்டை நேரடியாக உலகத்திற்கு விளக்க வேண்டிய அவசியம் தமிழர் தேசத்திற்கு இருந்தது. அதற்கான மிகச் சரியான மேடையாகவே இந்த செய்தியாளர் மாநாட்டை புலிகள் இயக்கம் கையாண்டது.

தொடர்ச்சி: பக்கம் 16

# நம்பிக்கை இல்லா பிரேரணைகளில் தமிழ்த்தேசிய கட்சிகள்
# மூக்கை நுளைக்காமல் இருப்பதே நல்லது..!

பா.அரியநேத்திரன்

இலங்கையின் வலுசக்தி அமைச்சர் குமார ஜயகொடிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நேற்று 2026 ஏப்ரல் 10 அன்று நடத்த பாராளுமன்ற நடவடிக்கைகள் குழு தீர்மானித்துள்ளது. எரிசக்தி விவகாரங்கள் மற்றும் அமைச் சரின் செயல்பாடுகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் காரண மாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இது ஆளும் தரப்புக்கு எதிரான அரசியல் சவாலாகக் கருதப்படுகிறது.



ஏற்கனவே சபாநாயகர் முன்பும், 2024 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பத்திலும், பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டு கௌரவ சபாநாயகர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலும், சபா நாயகராக பதவியேற்ற பின்னரும், அவருக்கு இல் லாத மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இரசாயன பொறியியலில் BSc பட்டம், ஜப்பானில் உள்ள வசேடா பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றிருப்பதாக குறிப் பிட்டு அவரது பெயருடன் கலாநிதி என்ற பிரயோகம் பயன்படுத்தப்பட்டுள்ளதாலும், இது தொடர்பில் மக்களிடம் இருந்து ஆட்சேபனை எழுந்த சந்தர்ப்பத்திலும், இது தொடர்பான தகவல் கேட்ட போது மௌனம் காத்து, உண் மையை மறைத்துள்ள காரணங்களினால் இந்த நம்பிக் கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேபோல் 2026 ஜனவரியில், இலங்கையின் கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் தரம் 6 ஆங்கிலப் பாடத்திட்டப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் (ஐக்கிய மக்கள் சக்தி) நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவரத் தீர்மானித்தன. சபாநாயகரிடம் கையளிக்கத் திட்டமிடப்பட்டிருந்த இந்த பிரேரணைக்கு, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு இணங்க முன்னுரிமை அளித்து விவாதிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக அறிவித்தது.

### பிரேரணைக்கான முக்கிய காரணங்கள்:

தரம் 6 ஆங்கிலப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய விடயங்கள். முந்தைய காலங்களில் (2018-ல்), வன்முறைகளைக் கட்டுப்படுத்தத் தவறியமைக்காக ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிரேரணை போன்ற சூழல்.



நம்பிக்கையில்லா பிரேரணை பற்றிய முக்கிய அம்சங்கள் இது பாராளுமன்ற ஜனநாயகத்தில், அரசின் பெரும்பான்மை அல்லது ஆட்சி செய்யும் திறன் மீது அதிருப்தி ஏற்படும்போது கொண்டுவரப்படும் ஒரு கருவியாகும்.

பொதுவாக எதிர்க்கட்சிகளால் கொண்டுவரப்படும் இத்தீர்மானம், வாக்கெடுப்பின் மூலம் வெற்றி பெற்றால், பிரதமர் மற்றும் அவரது அமைச்சரவை பதவி விலக வேண்டும். இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் 2க்கும் மேற்பட்ட முறை இதுபோன்ற தீர்மானங்கள் கொண்டுவரப் பட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கூடிய நாடாளுமன்றக் குழு இந்த முடிவை எடுத்தது, மேலும் இது அரசாங்கத்தின் கல்விச் சீர்திருத்தங்களில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவை 3 ஆவது பகுதியில் பிரிவு 6 இன் பிரகாரமும், அந்த நடத்தைக் கோவையின் 5 ஆவது பிரிவின் நெறிமுறைகளின் பிரகாரம் உள்ள நடத்தை விதிகளின்படி மேற்படி விதிகள் மீறப்பட்டுள்ளமையால் மற்றும் பாராளுமன்றம், அரசியலமைப்பு மற்றும் அவரால் நேரடி யாகத் தலைமை தாங்கப்படும் ஏனைய உயரிய நிறுவனங்களினதும் நம்பிக்கையை மீறியுள்ளபடியால் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.




ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற பெரும்பான்மை என்பன ஒரே கட்சியின் வசம் இருந்தால், இலங்கையில் மிகப் பலமான ஆட்சி அமையும். இப்படியான ஒரு நிலையில் தேசிய மக்கள் சக்தியினால் நினைத்தது எல்லாவற்றையும் செய்ய முடியும். குறிப்பாக அரச செலவீனங்களின் குறைப்பு, அரச திணைக்களங்களில் இடம்பெறும் மோசடிகள் மற்றும் வருமான இழப்புகளை சீர் செய்தல், வரி ஏய்ப்பு செய் பவர்களுக்கான தண்டனை, சிறப்பான கிராம அபிவிருத்தி போன்ற நாட்டிற்கு தேவையான பல நல்ல செயற்பாடுகள் இடம்பெறும்.



இதேவேளை கடந்த காலங்களில் இடம் பெற்ற பாரிய ஊழல்கள்(மத்திய வங்கி உட்பட), ஊடகவியலாளர்களின் படுகொலைகள், ஈஸ்டர் குண்டு தாக்குதல், உகண்டாவிற்கு அனுப்பப்பட்ட டொலர்கள் என எல்லா வற்றையும் விசாரிப்பதன் மூலம் முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த, ரணில் மற்றும் கோத்தபாய உட்பட பலர் குற்ற வாளிகளாக இனம் காட்டப்படலாம்.



2020 நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில், மகிந்த தலைமையிலான பொதுஜன பெரமுன 145 ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைத்தது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் எதிரொலியாக சிங்கள மக்கள் 68 இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளை பொதுஜன பெரமுனவிற்கு வழங்கியிருந்தனர். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் எனும் திடீர் அலை மூலம் தெரிவான பலமான அரசை, அதே சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டத்தின் மூலம் 2022இல் செயலிழக்கச் செய்திருந்தமையை நாம் இவ்விடத்தில் கோடிட்டு காட்ட வேண்டும்.



திசைகாட்டி சின்னத்தில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி இலஞ்சம், ஊழல் அற்ற புதிய இலங்கையை உருவாக்கும் எனும் நம்பிக்கையில் சிங்கள மக்கள் தமது பூரண ஆதரவை வழங்க அதிக வாய்ப்புகள் உள்ளதாக
2020 தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு கிடைக்கும் என கூறப்பட்டது ஆனால் வெறும் 445,958 வாக்குகள் மட்டுமே கிடைத்தது. இதன் மூலம் மூன்று ஆசனங்களைப் பெற்றிருந்தது.

2020 இல் பொதுஜன பெரமுனவிற்கு சிங்கள மக்கள் கொடுத்த ஆதரவை 2024, ல் தேசிய மக்கள் சக்திக்கு 159, பெரும்பான்மை பலத்தை இலங்கை மக்கள் கொடுத்துள்ளனர்.

அதிலும் வடகிழக்கில் இருந்து வேறெந்த ஆட்சியாளர்களுக்கும் 1948, ல் இருந்து 2020, தேர்தல் வரை கொடுக்காத 12, ஆசனங்களை வடகிழக்கு மக்கள் வழங்கியதும் சரித்திரத்தில் இதுவே முதல்தடவை.



தற்போதைய நாடாளுமன்றத்தில் ஒரு கட்சி ஆளும்தரப்பாக 159, ஆசனங்களுடனும், எதிர்கட்சிகள் 66, ஆசனங்களுடன் 12, கட்சிகளும் உள்ள நிலையில் ஆளும் தரப்பு அமைச்சர்களுக்கு எதிராக எதிர்கட்சிகள் நம்பிக்கை இல்லா பிரேரணைகள் சமர்பித்தாலும் அதை நிறைவேற்ற முடியாது.

எதிர்க்கட்சிகளும் பிரதான எதிர்க்கட்சியான தேசிய மக்கள் சக்தி அரசு சொல்வதெல்லாம் கேட்ககூடியவர்களாக இல்லை. இதில் வடகிழக்கை பிரதிநித்துவப்படுத்தும் தமிழ் தேசிய கட்சிகளில் 10, பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி 08, உறுப்பினர்களும், தமிழ்தேசிய மக்கள் முன்னணி 01, உறுப்பினரும், ஜனநாய தமிழ்தேசியகூட்டணி 01, உறுப்பினரும் இவர்கள் எதிர்கட்சிகள் கொண்டுவரும் நல்ல விடயங்களை ஆதரிக் கலாம். ஆனால் எடுத்ததற்கெல்லாம் நம்பிக்கை இல்லா பிரேரணையை கொண்டுவருவதால் அதனை ஆதரிப்பதில் எந்த பிரயோசனமும் இல்லை ஏனெனில் ஆளும் தரப்பு பலமாக உள்ளபோது எவரையும் நம்பிக்கை இல்லா பிரேரணை மூலம் பதவி பறிப்பு செய்ய முடியாது என்பதே உண்மை.

• • •

# இந்திய மீனவர்களின் இரட்டைமடி இழுவைப் படகுகளினால் அழிவடையும் வடக்கு கடல்வளம்

எழுத்தாக்கம் – ஊடகவியலாளர்
மு. மதிவாணன்



ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டம் முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் பகுதியில் ஆயுத மௌனிப்பின் பின், வடக்கில் நிலம் மற்றும் கடல்வளம் சூறையாடப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது!

குறிப்பாக கடல்வளம் அந்நிய நாட்டு மீனவர்களா லும் பிற மாவட்ட மீனவர்களாலும் சூறையாடப்படுவதும் ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ளமையும் கண்கூடு.

இதனால் முல்லைத்தீவு தொடக்கம் மன்னார் வரை யான கரையோர வாழ் மீனவர்களின் வாழ்வாதாரம் தூக்கு மேடை ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்களின் வாழ்வாதாரம் தூக்கு மேடையில் இன்னமும் குற்றுயிராய்த் துடித்துக் கொண்டே இருக்கின்றது.

இலங்கை - இந்திய மீனவர்களின் கடற்றொழில் வாழ்வாதாரம் குற்றுயிராய் துடிக்கும் நிலையில் இருந்து மீட்க வேண்டியது இலங்கை - இந்திய மத்திய அரசுகளின் பேச்சுக்களிலேயே தங்கியுள்ளது.

யுத்தம் இடம்பெற்று வந்த காலத்தில் இலங்கை கடற்பரப்பில் விடுதலைப் புலிகளுக்கும், கடற் படைக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வந்திருந்தது. இதன் காரணங்களால் அந்நிய சக்திகள் அல்லது வெளி நாட்டு மீன்பிடிப் படகுகள் (Sea of Srilanka) இலங்கைக்கே உரித்தான கடற்பரப்பினுள் அத்துமீற முடியவில்லை.



இக் காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பில் சட்ட விரோத நடவடிக்கைகளோ அல்லது எல்லை தாண்டிய மீன் பிடியோ சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்பட்டது.

இந்தப் பிரச்சினையின் வரலாறு, கொஞ்சம் நீண்டது. அதைக் கொஞ்சம் பார்த்துவிடலாம். பாக்கு நீரிணை மீன்பிடித் தொடர்பாக, இலங்கை-இந்திய மீனவர் களிடையே நீண்டகாலமாக இருந்து வந்த மோதல், இப்போது புதிய தளத்தை எட்டியுள்ளது.

இலங்கையில் மூன்று தசாப்த யுத்தத்தின் முடிவும் அண்மைய ஆட்சி மாற்றத்தின் பின்னரான கள நிலை மைகளும், இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியைப் புதிய பரிமாணத்துக்குக் கடத்தியுள்ளது. இலங்கைக் கடற்பரப்பில், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய பிரவேசமும், மீன்பிடியும், வளங்களின் சூறையாடலும், தமிழக அரசியல் தலைமைகள் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களது தடைசெய்யப்பட்ட சட்டவிரோத மீன்பிடி முறையான இரட்டைமடி இழுவைப் படகுகளின் தொழில் முறையை மேற்கொள்ள மறைமுகமாக ஆதரவளித்து வருகிறது.

கவனிக்க வேண்டிய இன்னோர் அம்சம் யாதெனில், இந்தியப் பெருமுதலாளிகள் யார் என்று ஆராய்கின்ற போது தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் பல மீனவர்களை பினாமிகளாக வைத்துக் கொண்டு குறித்த சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை அதிர்ச்சியளிக்கும் விடயமாகவுள்ளது.

அத்துடன் வடக்கு - கிழக்கு தமிழ்த் தலைமைகள் இரு நாட்டு மீனவர்களுக்குடையிலான பிரச்சினையில் தலை போடுவதில் ஒரு மெத்தனப் போக்கையே கையா ண்டு வருகின்றனர். நேரடியாக இந்திய அரசையோ, இலங்கை மீனவர்களது வாழ்வாதார அழிப்பையோ அல்லது வடக்கு கடல் வள அழிவையோ தட்டிக் கேட்காமல் மௌன மாக மௌனித்துப் பயணிக்கின்ற நிலையே நீடிக்கின்றது.

### அதற்கான காரணங்களாக இரு விடயங்களை இங்கு கூறிக் கொள்ள முடியும்!

**1) ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்சினையை அயல் நாடான இந்திய அரசே தீர்த்து வைக்கும் என்கிற ஒரு நம்பிக்கை.**

**2) இந்திய அரசுக்கு தமிழ்த் தலைமைகள் காட்டும் விசுவாசம் (வல்லரசை எதிர்க்க வேண்டாமே)**

### இரு நாட்டு மீனவர்களுக்கிடையே மூன்று அடிப்படைகள் ஆராயப்படுகின்றது.

**1: இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப் பிரச்சினைக் குள்ளானது எவ்வாறு என்பதையும் அதன் காரணங் களையும், வரலாற்று நோக்கில் ஆராய்கிறது.**

**2: அங்கு நிகழும் ஒவ்வாத மீன்பிடிச் செயற்பாடுகள், எவ்வாறு கடல் வளத்தையும் நீண்டகாலத்தில் மீன் வளத்தையும் பாதிக்கின்றன என்பதையும் நோக்குகிறது.**

**3: பிரச்சினையின் பின்னால் உள்ள அரசியல் நலன்களை, குறிப்பாக இந்திய அரசின் பிராந்திய நலன்களும் இலங்கை அரசினதும் தமிழ் அரசியல் தலைமையினதும் மௌனம் இவற்றின் அடிப்படையில், எதிர்காலத்தில் இலங்கையின் வடக்கு மீன் வளத்தைப் பாதுகாக்க உகந்த காப்பு நடவடிக்கைகளையும் அவற்றின் சாத்தியங்களையும் ஆராய்கிறது.**

இந்தியாவில் 1960களில் அறிமுகமான இழுவைப் படகுகள், புதிய மீன்பிடி முறையை அறிமுகப்படுத்தின. இது, “நீலப் புரட்சி” என அழைக்கப்பட்டது. சாதாரண மீன்பிடி முறைக்குப் பழக்கப்பட்டிருந்த மீனவர்க்கு, இந்தியாவின் மத்திய, மாநில அரசுகளும் பின்னர் தனியார் தொண்டு நிறுவனங்களும், கடன்களையும் உதவிகளையும் வழங்கி, இழுவைப் படகுகளின் பயன்பாட்டை ஊக்குவித்தன.

இதனால், மீன்பிடியில் பெருமுதலாளிகளின் பங்கு வலுத்ததுடன், சுயதொழிலாக மீன்பிடியை மேற்கொண்ட சாதாரண மீனவர்கள், நெருக்கடிகளை எதிர்நோக்கினர். காலப்போக்கில், அவர்கள் முதலாளிகளின் இழுவைப் படகுத் தொழிலாளர்களாக வேலை செய்வதற்கே அது வழிவகுத்தது.

1980க்கும் 1996க்கும் இடையில், தமிழ்நாட்டில் இழுவைப் படகுகளின் பாவனை பாரியளவு அதிகரித்தது. இக்காலப் பகுதியில், மீன்பிடியின் அளவு இருமடங்காகியது. அதனால், இழுவைப் படகுகளின் தொகை மேலும் அதிகரித் தது.

தற்போதைய தரவுகளின்படி, தமிழ் நாட்டில் தற்போது 2,500 தொடக்கம் 3000 வரையான இழுவைப் படகுகள் உள்ளன. அவற்றில், பெரும்பாலான இழுவைப் படகுகள் மீன்பிடிக்கு, இலங்கைக் கடற்பரப்பையே நம்பி இருக்கின்றன.

அதேவேளை, இலங்கையில் இழுவைப் படகுப் பாவனை, முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இன்றும் உள்ளூர் இழுவைப் படகுகள் யாழ்ப்பாண மாவட்டத் தில் கரையூர் மற்றும் வல்வெட்டித்துறை பகுதிகளில் சுமார் 500வரையான இழுவைப் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டே வருகின்றது.

இந்த உள்ளூர் படகுகளினாலும் தமது வாழ் வாதாரம் அழிக்கப்படுவதாகவும், மீன் உற்பத்தியாகும் பவளப் பாறைகள், கடல் அடியில் உள்ள பாறைகள் அழிக்கப்பட்டு கடல்வளம் முற்றாக அழிக்கப்படுவதாகவும் உள்ளூர் மீனவ அமைப்புக்கள் தொடர்சியாக குரல் கொடுத்து வருகின்றன.




உள்ளூர் இழுவைப் படகுகளுக்கு சட்ட ரீதியாக அனுமதி வழங்கப்படாத போதும், மாறி மாறி வரும் அரசாங் கம், அதன் மீன்பிடி அமைச்சர்கள் கையூட்டு களைப் பெற்றுக் கொண்டு அனுமதிகளை வழங்குவதாக மீனவ அமைப்புகள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றன.

ஆனாலும் இந்த உள்ளூர் இழுவைப் படகுகள் தொடர்பில் கடற்றொழில், நீரியல்வளத்துறை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் வினவிய போது:- குறித்த உள்ளூர் இழுவைப் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு சில பல காரணங்களுக்காக சில நிபந்தனை களுடன், நான் அமைச்சராக வருவதற்கு முன்னரே அனுமதி பெற்றுக் கொடுத்து இருந்தேன் என்றார்.

**அவர் கூறிய காரணங்களாவன-**

**1) யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் உடனடியாக மாற்றுத் தொழிலுக்குச் செல்ல முடியாது.**

**2) அப்போதிருந்த பொருளாதார நிலை.**

**3) கொரோனா பெருந் தொற்று**

**4) பொருளாதார நெருக்கடி நிலையால் நாடு வங்குரோத்து நிலையடைந்திருந்தமை.**

மேற்குறித்த காரணங்களால் உள்ளூர் இழுவைப் படகுகளில் மீன்பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

**தொடரும்....**

# அரசாங்கத்தின் 'விசேட திட்டம்' இதுவரை இழைக்கப்பட்ட துரோகத்திற்கான பரிகாரமா?



மருதன் ராம்

இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவை அண்மையில் வெளியிட்ட தீர்மானம், பல தசாப்தங்களாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த பெருந்தோட்ட மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை நோக்கிய ஒரு முக்கிய நகர்வாக மாறியுள்ளது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய முதுகெலும்பாக திகழும் மலையக பெருந்தோட்ட மக்கள் காணி உரிமை இன்றி இதுவரை காலமும் வஞ்சிக்கப்பட்டமை அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக அறிக்கையின் ஊடாக மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது

அந்த ஊடக அறிக்கையின்படி, "தித்வா புயல் அனர்த்தத்தால் முழுமையாக அல்லது பகுதியளவில் வீடுகள் சேதமடைந்த மற்றும் மண்சரிவு ஆபத்துக்கள் காணப்படுகின்ற இடங்களில் வசிக்கின்ற தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கான வீட்டுத்திட்டம்" என்ற தலைப்பில் குறித்த தீர்மானம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது



"தித்வா புயல் அனர்த்தத்தை அடுத்து வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கமைய, வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கான வீடமைத்தல் மற்றும் புனரமைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் வகுக்கப்பட்டிருப்பினும், அச்சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கமைய தோட்டத் தொழிலாளர் வதிவிடதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கு விசேட ஏற்பாடுகள் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

அதனால், தோட்டக் கம்பனிகளால் நிர்வகிக்கப்படுகின்ற தோட்டங்களில் தொழில் புரிகின்ற தொழிலாளர்களின் வீடுகள், தித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு மற்றும் வேறு இயற்கை அனர்த்தங்களால் முழுமையான பாதிப்புக் களுக்கு உள்ளாகியமை/மண்சரிவால் அதி ஆபத்துக்குள்ளாகியமை/ பகுதியளவில் பாதிப்படைந்து அவற்றின் பயன் பாட்டுக் காலம் முடிவடைந்தமை போன்றன உறுதிப் படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில், பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் மற்றும் வீட்டுத் திட்டவரைபடத்திற்கமைய 650 சதுர அடி வீடொன்றை அமைப்பதற்காகக் கட்டம் கட்டமாக 05 மில்லியன் ரூபாய்களை (50 இலட்சம்) அரசு வழங்கி, அவ்வாறான தொழிலாளர்களுக்கு வீடமைப்புத் திட்டத்தை அமல் படுத்துவதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது.



குறித்த தொழிலாளிக்கு அவர்கள் வசித்து வருகின்ற தோட்டத்திலேயே பாதுகாப்பான இடத்தில் 10 பேர்ச்சஸ் காணித்துண்டு அந்தந்த தோட்டக் கம்பனிகளால் வழங்குவதற்கும், தோட்டத் தொழிலாளரின் சேவை தொடர்ந்தும் தேவையல்லவென தோட்டக் கம்பனி தீர்மானிக்கின்ற போது, தொழிலாளரிடமுள்ள காணியில் அல்லது வழங்கப்படுகின்ற 05 மில்லியன் ரூபாய்களில் காணியொன்றைக் கொள்வனவு செய்து வீட்டை அமைப்பதற்கும் உத்தேச வேலைத்திட்டத்தின் மூலம் வசதியளிக்கப்படும்.



அதற்கமைய, குறித்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியும், பெருந்தோட்ட மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது." என்று விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேற்கூறிய அறிக்கையானது, மலையகப் பெருந்தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் கட்டமைப்பு ரீதியான பாகுபாட்டை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக ஒப்புக் கொண்ட ஆவணமாகத் திகழ்கிறது.



அறிக்கையின் தொடக்கத்திலேயே, "சுற்றறிக்கை ஆலோசனைகளில் தோட்டத் தொழிலாளர்களுக்கு விசேட ஏற்பாடுகள் குறிப்பிடப்படவில்லை" என்ற வாசகம் முக்கியமானது. இலங்கை அரசாங்கம் ஒரு பொதுவான அனர்த்த நிவாரணத் திட்டத்தை வகுக்கும்போது, தோட்டப்புறங்களை ஒரு தனித்துவமான நிலப்பரப்பாகக் கருதத்

தொடர்ச்சி: பக்கம் 16



# தமிழ்நாட்டில் ஈழத்தமிழ் மாணவர்கள்: கல்வி அனுமதிச் சிக்கல்

திலீபன்

தமிழ்நாட்டில் தங்கியுள்ள ஈழத்தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் மாணவர்களின் உயர்கல்வி உரிமைகள், குறிப்பாக மருத்துவம் மற்றும் சட்டப் படிப்புக ளில் அவர்களுக்கான அனுமதி குறித்த விரிவான சமூக-சட்டப் பார்வையை இக்கட்டுரை முன்வைக்கிறது. 1983-ஆம் ஆண்டு முதல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாகத் தமிழ்நாட்டிற்குப் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்க ளில் கணிசமானோர் இங்கேயே பிறந்து, மாநிலப் பாடத் திட்டத்தின் கீழ் பயின்ற இரண்டாம் மற்றும் மூன்றாம் தலைமுறை இளைஞர்களாவர். இவர்களுக்கான கல்வி வாய் ப்புகள் காலப்போக்கில் பல மாற்றங்களைச் சந்தித்துள்ளன.



**ஈழத்தமிழ் அகதிகளின் கல்வி உரிமைகள் அரசியல் சூழல்களுக்கு ஏற்பப் பல்வேறு கட்டங் களாக மாறியுள்ளன:**

- முதற்கட்டம் (1983-1987): சுமார் 1,34,053 அகதிகள் வருகை தந்த இக்காலத்தில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அவர்கள் சேர அனுமதி அளிக்கப்பட்டது.
- இரண்டாம் கட்டம் (1989-1991): சுமார் 1,22,078 அகதிகள் வருகை தந்தனர். 1991-இல் நிகழ்ந்த படுகொலை சம் பவத்திற்குப் பிறகு பாதுகாப்பு காரணங்களால் கல்வி வாய்ப்புகள் பெரும் பின்னடைவைச் சந்தித்தன.
- மீட்டெடுப்பு காலம் (1996-2002): கலை மற்றும் அறி வியல் கல்லூரிகளில் மீண்டும் அனுமதி வழங்கப்பட்டு, 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்கல்வியில் இணைந்தனர்.
- தொழில்முறைப் படிப்புகள் (2010 - தற்போது): பொறியி யல் மற்றும் மேலாண்மைப் படிப்புகளில் அனுமதி வழங்கப்பட்டது. இருப்பினும் மருத்துவப் படிப்புகளில் சேருவது இன்னும் சவாலாகவே உள்ளது.

இந்தியாவில் பிறந்து வளர்ந்திருந்தாலும், 1955-ஆம் ஆண்டின் இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின்படி, முறை



யான பயண ஆவணங்களின்றி நுழைந்தவர்கள் “சட்ட விரோத குடியேறிகள்” (Illegal Migrants) என்று வகைப்படுத் தப்படுகின்றனர். இந்த முத்திரை அவர்களின் குடியுரிமை மற்றும் கல்வி உரிமைகளைத் தடுத்து நிறுத்துகிறது.

மத்திய உள்துறை அமைச்சகம் 2025-ஆம் ஆண்டு வெளியிட்ட புதிய ஆணை, மாணவர்களின் சட்டப் பாதுகாப்பில் முக்கிய மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது:

1. நாடு கடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு: 2015-ஆம் ஆண்டு ஜனவரி 9-ஆம் தேதிக்கு முன்பாக இந்தியா விற்குள் நுழைந்தவர்களுக்கு பாஸ்போர்ட் மற்றும் விசா விதிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
2. கல்வி நிறுவனங்களில் சேர்க்கை: வட்டாட்சியர் அலுவலகங்கள் மூலம் வழங்கப்படும் அடையாள அட்டைகள் மற்றும் முகாம் சான்றிதழ்கள் சேர்க்கைக்குப் போதுமான ஆவணங்களாக ஏற்றுக்கொள்ளப்படுகின் றன.
3. சட்டப்பூர்வ அங்கீகாரம்: “சட்டவிரோத குடியேறிகள்” என்ற முத்திரை நீக்கப்பட்டு, அவர்கள் இந்தியாவில் தங்குவது முறைப்படுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த ஆணை அவர்களுக்குக் குடியுரிமை யையோ அல்லது நீண்டகால விசாவையோ (LTV) வழங்க வில்லை என்பது ஒரு பெரும் குறையாகவே நீடிக்கிறது.

## மருத்துவப் படிப்பு சேர்க்கை: தீராத போராட்டமும் நீதிமன்றத் தலையீடுகளும்

அரசு மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கு “இந்தியக் குடியுரிமை” மற்றும் “இருப்பிடச் சான்று” அடிப்படைத் தேவைகளாக உள்ளன. இது ஈழத்தமிழ் மாணவர்களுக்குப் பெரும் தடையாக உள்ளது.

**மருத்துவச் சேர்க்கையில் நிலவும் முக்கியச் சிக்கல்கள்:**

- குடியுரிமை நிபந்தனை: அரசு ஒதுக்கீட்டு இடங்களைப் பெறுவதில் உள்ள முட்டுக்கட்டை.
- கட்டணச் சுமை: மாணவர்கள் பெரும்பாலும் “நிர்வாக ஒதுக்கீடு” அல்லது “வெளிநாட்டவர்” பிரிவின் கீழேயே பரிசீலிக்கப்படுவதால் லட்சக்கணக்கில் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது.
- கடனுதவி சிக்கல்: வங்கிகள் அங்கீகரிக்காததால் கல்விக்கடன் பெறுவதில் உள்ள சிரமங்கள்.
- நீதிமன்றத் தலையீடு: டி. நந்தினி (2014) போன்ற பல மாணவர்கள் தங்கள் கல்வி உரிமைக்காக நீதி மன்றத்தை அணுக வேண்டிய கட்டாயம் உள்ளது.

செட்டிநாடு மருத்துவக் கல்லூரி தொடர்பான வழக்கில் (2025), கல்வியை ஒரு வணிக ரீதியான முயற்சியாகப் பார்க் கக்கூடாது என்று நீதிமன்றம் அறிவுறுத்தியது மாணவர் களுக்கு ஓரளவிற்குப் பாதுகாப்பை வழங்குகிறது.

## சட்டப் படிப்பு சேர்க்கை: தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் (TNDALU)



சட்டப் படிப்புகளைப் பொறுத்தவரை சேர்க்கை நடை முறைகள் சற்றே எளிமையாக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் 2024-25 கல்வியாண்டு விண்ணப்பங்களில் அகதி மாணவர்களுக் கெனத் தனிப்பிரிவு வழங்கப்பட்டுள்ளது.

**சட்டப் படிப்பு சேர்க்கை குறித்த தகவல்கள்:**

- விண்ணப்ப முறை: பல்கலைக்கழக இணையதளம் வழியாக ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.
- தகுதி காண் மதிப்பெண்: 12-ஆம் வகுப்பு அல்லது பட்டப்படிப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் தரவரி


தொடர்ச்சி: பக்கம் 17

# சாதியும் தமிழக தேர்தலும்!

சட்டவாளர் **ஆதி**

இந்திய ஒன்றியத்தின் அடித்தளம் பார்ப்பனீயத்தின் மீது கட்டமைப்பு செய்யப்பட்டது. இதை எவரும் மறுத்திடவோ மறைக்கவோ இயலாது. தூய இந்திய தேசம் என்பது வெறும் கற்பனாவாதமே அன்றி எதார்த்தம் அல்ல! சாதி குறித்த வரலாற்று ஆய்வாளர்கள் சாதியின் தோற்றம் வளர்ச்சி குறித்து பல்வேறு விதமான ஆய்வு முடிகளை அடைந்துள்ளனர்.





பார்ப்பனீய பிசாசுகளின் நயவஞ்சகமான அரசியலை அம்பேத்கர் பெரியார் மற்றும் பலர் கடுமையாக கண்டனம் சேர்த்து உள்ளதோடு நிலவும் சிதறிய தீமைகாகு எதிராக தமது வாழ்நாள் முழுவதும் போராடினர். இந்திய சுதந்திரம் அடைவதற்கு முன்பே இவர்களின் போராட்டம் தொடங்கிய போதிலும் வகுப்பு வர்ண பேதமற்ற இந்தியாவை உருவாக்க முடியவில்லை அல்லது இந்த ஆளுமைகளின் கோரிக்கையை ஒரு பொருட்டாக கூட இந்திய ஆட்சியாளர்கள் எடுத்து கொள்ள வில்லை. பார்ப்பனீய சித்தாந்த தலைமையிலான இந்து மதம் தான் இந்திய தேசியத்தின் ஆணி வேரை அந்த ஆணி வேரில் கொதி நீரை ஊற்றும் அளவுக்கு இந்திய தேசியத்தின் வடிவமைப்பாளர்கள் முட்டாள் அல்ல!

பெரியார் போன்றோர்கள் பார்ப்பனீயத்தின் சாதிய ஒடுக்குமுறைக்கு மட்டுமின்றி அதன் தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராக போராடினர். இவர்களை போல பலர் போராடிய வரலாறு இந்திய ஒன்றியத்தில் உள்ளது.

இந்தியாவில் முதல் தேர்தல் நடந்த நாளிலிருந்து சாதி அமைப்பை அரசியல் கட்சிகளும் அதிகார வர்க்கமும் திறம் பட கையாண்டாது. ஒரு முனையில் சமத்துவம் பேசிக்கொண்டே மறுமுனையில் சாதியம் நிலவுவதற்கான அடித்தளத்தை பாதுகாத்தனர். இந்திய அரசமைப்புச் சட்டம் சட்ட ப் படி தீண்டாமையை தடை செய்திருக்கிறதே தவிர சாதியை அதை பின்பற்றுவதை தடை செய்யவில்லை. சொந்த செலவில் யாரும் சூனியம் வைத்துக் கொள்ள மாட்டார்கள்.

தற்போதைய தேர்தல்கள் சாதி குறித்தெல்லாம் அலட்டிக் கொள்ளவில்லை அது அவர்களின் இருத்தலுக்கு எதிரானது. இந்திய தேர்தல் சாதியை மையம் கொண்டே சற்றிச் சுழல்கிறது. இதற்கு இந்திய ஆளும் தரப்பின் சித்தாந்த மற்றும் அரசியல் விளக்கமே சான்று அதாவது சாதி அமைப்பை வைத்து கொண்டே சாதிகளுக்கு இடையே சமத்துவத்தை அடைய முடியும் என்று மக்களுக்கு பாடம் எடுக்கிறார்கள். சாதி இருக்கும் வரையிலும் சாதிய வேறு பாடுகள் இருக்கத் தான் செய்யும் என கூறி உள்ளார்.

## எங்கே தவறு நடந்தது!

உளப்பூர்வமாக போராடியவர்களின் நோக்கம் முழுமை அடைய வில்லை! இந்திய ஒன்றியத்தின் சட்டகத்திற்கு உட்பட்ட நிலையில் தான் இவர்கள் போராட்டம் நடத்தினர். இந்திய ஒன்றியத்தின் சட்டகம் வேறும் சில்லறை சலுகைகளையும் உரிமைகளையும் வழங்கியதே தவிர உருப்படியாக எதையும் செய்ய வில்லை.

தமிழீழம் மற்றும் நேபாளம் இரண்டு தேசங்களிலும் சாதிக் கொடுமைகள் நிலவியது என்பது உண்மை ஆனால் இந்த இரண்டு தேசங்களிலும் சாதி ஏறக்குறைய ஒழிக்கப்பட்டது வெறும் கருத்தளவிலான சிந்தனையாக மட்டுமே நின்று பிறகு மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்று இரண்டு தேசியவாத அரசுகளும் அழிக்கப்பட்டுள்ளது. நேபாளத்தின் சோசலிச புரட்சி அதன் உட்பகையால் சிதைந்து விட்டது.

உண்மையான புரட்சியாளர்களுக்கு பதிலாக போலிகளின் கையில் ஆட்சி அதிகாரம் சென்று விட்டது. இதை முன்னின்று நடத்தியது சந்தேகமே இல்லாமல் தில்லி அதிகாரவர்க்கம் தான். இதில் காங்கிரஸ் பாஜக என்ற வேறுபாடுகள் இல்லை. அன்றைய காலத்தில் சிபிஎம் கட்சி பல சந்திப்புகளை இந்தியாவுக்காக நேபாளத்தில் பல சந்திப்புகளை நடத்தினர்.



தமிழீழத்தின் நிலைமை குறித்து சொல்லி தெரிய வேண்டியதில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் கைகளில் அரசதிகாரம் வரும் போது மட்டுமே சமூகத்தில் நிலவும் பல மக்கள் விரோத செயல்களைக் களைய முடியும்!

இரண்டு தேசங்களிலும் பல பாடங்களை இந்தியாவுக்கு வழங்கி உள்ளது. ஆனால் தொகுத்து அறிபவர்கள் மிகக்குளைவே!

நடக்கும் தமிழக தேர்தல் எந்த மாற்றத்தையும் சாதிய அமைப்பில் எந்தவொரு அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தப் போவதில்லை ஆனால் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட தரப்பினர் தேர்தலை ஒரு கேடயமாக பயன்படுத்திக் கொள்ளலாம் ஆனால் எதார்த்தத்தில் வாளின்றி கேடயத்திற்கு மதிப்பு இருக்காது!

• • •

# 'சின்னவரின் நினைவுகளில்' நூல் பிரித்தானியாவில் வெளியீடு

கப்ரன் விஜயகுமார் என்பவர் எழுதிய 'சின்னவரின் நினைவுகளில்' என்ற நூல் பிரித்தானியாவில் 04/04/2026 இல் வெளியிடப்பட்டது.



இந்த நிகழ்வில் மங்கல விளக்கினை நூலாசிரியரின் மைத்துனி திருமதி கமலாராணி பிறேம் குமார். திருமதி பானுமதி அமரன், திரு. வல்வைத் தேவன், திரு. சேரன், திருமதி கமலினி சிறீபாலன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். வரவேற்புரையினை திருமதி.துஸ்யந்தினி நிகழ்த்தினார். நூலின் வெளியீட்டின் கருத்துரையினை களமருத்துவர் தணிகை ஆற்றினார்.





மேலும் நூலுக்கான சிறப்புரையினை ஊடகவியலாளர் அருஸ் ஆற்ற நூல் விமர்சனத்தினை எழுத்தாளர் சாவித்திரி அத்துவிதானந்தன் ஊடகவியலாளர் கோபி இரத்தினம் ஆற்றினர். அத்தோடு வல்வைத் தேவன், சுகி கோபியும் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.








'சின்னவரின் நினைவுகளில்' என்ற நூலின் முதல் சிறப்பு பிரதியை கள மருத்துவர் தணிகை வெளியிட்டு வைக்க சிறீபாலன்பெற்றுக்கொண்டார். ராமா சேர் என்று அழைக்கப்படும் ராமச்சந்திரன் அவர்களும் சிறப்பு பிரதிகளை வெளியிட்டு வைத்தார். இறுதியாக செல்வி அபிஷ்னா ரவியின் நன்றி உரையுடன் இந் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.


பாராளுமன்றக் கண்காட்சி
உண்மைகள் உறங்காது
தமிழ் இனப்படுகொலை 1948 – 2026
13 வைகாசி 2026 ; காலை 11:00 தொடக்கம் மாலை 4:00
Australian Parliment House, Canbera ACT 2600
Dining Room - 1
கண்காட்சி பற்றி
1948 முதல் இன்று வரை இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலையின் உண்மைகளை இந்தக் கண்காட்சி பதிவு செய்கிறது.
வரலாற்று காலவரிசைகள், ஆதாரங்கள் மற்றும் மக்களின் வாழ்வனுபவங்களின் மூலம், பல தசாப்தங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் அமைப்புசார்ந்த வன்முறை, கட்டாய இடம்பெயர்வு மற்றும் அநீதிகளை இது வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.
நிகழ்ச்சி நிரல்
• நாள் முழுவதும் கண்காட்சி திறந்திருக்கும்
• இடைவேளைகளில் பேச்சாளர்களின் உரையாடல்கள்
கலந்து கொள்வதன் அவசியம்
• தமிழ் இனப்படுகொலையின் வரலாற்றை அறிந்து கொள்
• சமூகத்தின் குரல்களை கேட்க
• மனித உரிமை ஆதரவாளர்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்களுடன் கலந்துரையாட
• நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக ஒன்றிணைய
Tamil Refugee Council
KALYANI INPAKUMAR
TRC NSW COORDINATOR
0425 306 933



# போர் நிறுத்தத்திற்குப் பிறகு ஏற்படக்கூடிய மூன்று சாத்தியக்கூறுகள்

“இன்று இரவு ஒரு முழு நாகரிகமும் அழிந்துவிடும்” என்று அச்சுறுத்திய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் கிட்டத்தட்ட பேரழிவு போன்ற சொல்லாடல், திடீரென பதற்றம் தணிவதற்கு வழிவிட்டது. ஏப்ரல் 7 ஆம் தேதி மாலைக்குள், அமெரிக்காவும் ஈரானும் இரண்டு வார கால போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அறிவிக்கப்பட்டது; சிறிது நேரத்திற்குப் பிறகு, இஸ்ரேலும் இதில் இணையும் என்று உறுதிப்படுத்தியது. இந்த இரண்டு வாரங்களில், பாகிஸ்தான் மத்தியஸ்தராகச் செயல்பட, ஒரு நிரந்தர அமைதி ஒப்பந்தத்தை நோக்கிய பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட உள்ளன.



மோதலின் ஆரம்பத்திலிருந்தே மிகவும் சாத்திய மானதாக நாங்கள் கருதிய சூழ்நிலை இதுதான். போர் மீண்டும் தொடங்கக்கூடும் (அதைப்பற்றி கீழே காண்போம்), ஆனால் தற்போதைக்கு, பாரசீக வளைகுடா உண்மையில் பாரசீகவசமாகும் ஒரு யதார்த்தத்தை நோக்கியே விஷயங்கள் நகர்வது போல் தெரிகிறது. ஈரான் இப்போது வளைகுடாவில் கப்பல் போக்குவரத்தை திறம்பட கட்டுப்படுத்துகிறது மற்றும் அரபு எண்ணெய் முடியாட்சிகளை ஆபத்தில் ஆழ்த்துகிறது - மேலும் அமெரிக்கா அதை ஏற்றுக்கொள்வதாகத் தெரிகிறது.

### சூழ்நிலை 1: ஒரு நீடித்த போர் நிறுத்தம்

போர் இடைநிறுத்தம் மாதங்கள் - அல்லது ஆண்டுகள் கூட நீடிக்கும் என்று வைத்துக்கொள்வோம். அது முற்றிலும் சாத்தியமானதே: ஒரு முறையான அமைதி ஒப்பந்தம் உருவாகாவிட்டாலும் கூட, போர் நிறுத்தம் மீண்டும் மீண்டும் நீட்டிக்கப்படலாம்.



அத்தகைய சூழலில், அரபு நாடுகளின் முதன்மை முன்னுரிமை, ஒரு புதிய தலைமுறை வான் பாதுகாப்பை உருவாக்குவதாக இருக்கும். அதற்கான செயல் திட்டம் மிகவும் தெளிவாக உள்ளது: தரைவழி ஏவுகணைகளாக (ரஷ்யாவின் பான்சிர் போன்றவை) அல்லது வான்வழி ஏவுகணைகளாக (APKWS போன்றவை) இருக்கும் மலிவான, பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் இடைமறிப்பு ஏவுக ணைகளைச் சார்ந்திருப்பது. அரபு நாடுகள் மற்றும் இஸ்ரேல் ஆகிய இரண்டும், தங்களின் பாரம்பரிய வான் பாதுகாப்பு இருப்புகளை நிரப்புவதோடு, இதிலும் கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.




இரண்டாவது முன்னுரிமை, தளவாடங்களைப் பன்முகப்படுத்துவதாக இருக்கும் – அதாவது செங்கடலுக்குப் புதிய குழாய் வழிகளை அமைப்பது மற்றும் வளைகுடா கப்பல் வழித்தடங்களுக்கு மாற்றுகளைக் கண்டறிவது. இதன் நோக்கம் வெளிப்படையானது: ஈரானின் ஹார்முஸ் ஜலசந்திப் பிடியிலிருந்து விடுபட்டு, அதன் செல்வாக்கைக் குறைப்பது. இருப்பினும், கத்தார், பஹ்ரைன், குவைத் மற்றும் ஈராக் போன்ற நாடுகளுக்கு, அரேபிய தீபகற்பம் முழுவதும் குழாய் வழிகளை அமைப்பது என்பது மற்றொரு பிராந்திய சக்தியான சவுதி அரேபியாவைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கும். மேலும், நிச்சயமாக, போக்குவரத்து கட்டணங்களும் பொருந்தும்.



இவை எதுவும் மூலப் பிரச்சினையைத் தீர்க்க வில்லை. வளைகுடாவின் புவியியல் அமைப்பு முழுமை யான பாதுகாப்பை சாத்தியமற்றதாக்குகிறது. 500 கடல் மைல்களுக்கும் (சுமார் 1,000 கி.மீ.) அதிகமான தூரத்திற்கு – ஒரு பழைய ஆர்கேட் ஷூட்டர் விளையாட்டிலிருந்து வந்தது போல – ஒவ்வொரு கப்பல் போக்குவரத்துப் பாதையும் ஈரானின் கைக்கு எட்டும் தூரத்தில் உள்ளது. கடற்கரையோரம், துறைமுகங்கள், தொழிற்சாலைகள், கடல்நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள், தரவு

தமிழில்: **ஆர்தீகன்**

மையங்கள், ஹோட்டல்கள் மற்றும் வானுயரக் கட்டடங்கள் ஆகியவை ஒரு துப்பாக்கிச் சுடும் பயிற்சித் தளத்தில் உள்ள இலக்குகளைப் போல வெளிப்படையாக அமைந்துள்ளன. இவை அனைத்தையும் கடலிலிருந்து பாதுகாப்பது மிகவும் கடினம், மேலும் தற்போதைக்கு, அரபு நாடுகள் பாதுகாப்பான பயணத்திற்காக பணம் செலுத்தவே பெரும்பாலும் விரும்பும்.

இறுதியில், அந்தப் பாதுகாப்புக் குடையை யார் வழங்குகிறார்கள் என்பதைப் பற்றி அவர்கள் உண்மையில் கவலைப்படுவதில்லை. முன்பு அவர்கள் அமெரிக்காவிற்குப் பணம் செலுத்தி வந்தனர்; இப்போது ஈரானுக்குப் பணம் செலுத்துவார்கள். அதன் விலை அவ்வளவு அதிகமாகவும் இல்லை – ஒரு சூப்பர்டேங்கருக்கு சுமார் 2 மில்லியன் டாலர்கள் என்று கூறப்படுகிறது, இது கப்பலில் உள்ள எண்ணெயின் மதிப்பில் வெறும் 2-3% மட்டுமே. மேலும், இறுதியில், வாங்குபவர்கள்தான் எப்படியும் அந்தச் செலவை ஏற்கப் போகிறார்கள்.

கிழக்குப் பகுதிகளில், ஒரு புத்திசாலித்தனமான ஆட்சியாளரின் மிக உயர்ந்த அடையாளங்களில் ஒன்று, அண்டை நாடுகளிடம் கப்பம் விதித்து, அவர்களைத் தனது அதிகாரத்தை ஏற்க வைக்கும் திறன் ஆகும். இந்தக் கொள்கை ஈரான் மற்றும் அரபு உலகம் ஆகிய இரண்டிலும் நன்கு புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. முரண்பாடாக, அமெரிக் காவும் இஸ்ரேலும் உள்ளூர் அரசியல் தர்க்கத்திற்கு உண் மையில் பொருந்தக்கூடிய ஒரு புதிய பிராந்திய ஒழுங்கைக் கொண்டுவர உதவியிருக்கலாம்.



இப்போது வாஷிங்டனும் மேற்கு ஜெருசலேமும் தங்கள் செல்வாக்கை மீண்டும் கட்டியெழுப்ப ஒரு நீண்ட, கடினமான போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் – மேலும் அவர்கள் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் அரபு நாடுகளால் சந்தேகக் கண்ணுடன் பார்க்கப்படும்: ஒருவேளை எல்லாம் மீண்டும் சிதைந்துவிட்டால் என்ன செய்வது? அந்தத் தலைமை ஓநாய் தனது இலக்கைத் தவறவிட்டது.

### சூழ்நிலை 2: மீண்டும் போர்

ஈரானியப் பேச்சுவார்த்தையாளர்கள் மீண்டும் குறிவைக் கப்படலாம், இது போர்நிறுத்தம் முன்கூட்டியே முறிவதற்கு வழிவகுக்கும். இருப்பினும், இது ஒப்பீட்டளவில் சாத்திய மில்லை என்றே நாங்கள் கருதுகிறோம்: அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கணிசமான இராணுவத் திறன்கள் இருந்தபோதிலும், வழக்கமான வழிமுறைகள் மூலம்

தொடர்ச்சி: பக்கம் 15



# அமெரிக்காவின் முழு அணுகுமுறையையும் மாற்றியமைத்த சமர்

வேல்ஸில் இருந்து **அருஸ்**

ஏப்ரல் 3 அன்று, ஈரானின் மீது பறந்த அமெரிக்க F-15E ஸ்ட்ரைக் ஈகிள் ரக போர் விமானம் ஒன்று, தரை-வான் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பால் சுட்டு வீழ்த்தப்பட்டது. ஈரானின் மூன்றாவது பெரிய நகரமான இஸ்பஹானுக்குத் தெற்கே சுமார் 20 கி.மீ தொலைவில் அந்தப் போர் விமானம் விழுந்து நொறுங்கியது. விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து, விமானத்திலிருந்து வெளியேறி பாராசூட் மூலம் ஈரானில் குதித்த இரண்டு விமானிகளை மீட்க அமெரிக்க ஆயுதப் படைகள் மேற்கொண்ட முயற்சிகள், பனிப்போருக்குப் பிந்தைய காலத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவில் விமான இழப்புகளுக்கு வழிவகுத்துள்ளன.



வீழ்த்தப்பட்ட விமான வீரர்களுக்கான ஒரு வழக்கமான கொள்கையான விரைவான மீட்பு நடவடிக்கையை அமெரிக்கா தொடங்கியது. முதலாவது விமானி விமானம் வீழ்ந்த 7 மணிநேரத்தில் மீட்கப்பட்டபோதும், இரண்டாவது ஆயுத தொகுதிய அதிகாரி மீட்கப்படவில்லை. அவரை ஈரானிய மக்களும் படையினரும் தேடிய சமயம், அமெரிக்காவும் தீவிரமாக தேடிவந்தது.

இரண்டாவது பணியாளரை மீட்பதற்காக ஒரு நடவடிக்கை தொடங்கப்பட்டது. சிறப்புப் படைகளை ஏற்றிச் சென்ற இரண்டு MC-130J கமாண்டோ II போக்குவரத்து விமானங்கள் தரையிறங்கின, அதற்குள் நான்கு MH-6M லிட்டில் பேர்ட் ஹெலிகாப்டர்களும் இருந்தனஇ விபத்து நடந்த இடத்திலிருந்து சுமார் 25 கி.மீ தெற்கே உள்ள கைவிடப்பட்ட ஒரு விவசாய விமான ஓடுபாதையில் அவை தரையிறங்கின. MH-6M லிட்டில் பேர்ட் என்பது ஒரு இலகுரக, முட்டை வடிவ ஹெலிகாப்டர் ஆகும். இது வியட்நாம் போரின் போது பரவலாகப் பயன்படுத்தப்பட்ட ஹியூஸ் OH-6 கேயூஸின் வழித்தோன்றலாகும், மேலும் 'அபோகலிப்ஸ் நவ்' திரைப்படத்தின் மூலம் பலருக்கும் பரிச்சயமானது.



விமானத்திலிருந்து வெளியேற்றப்பட்ட விமானி, அந்தத் தற்காலிக விமான ஓடுபாதையிலிருந்து சுமார் 8 கி.மீ வடமேற்கே உள்ள மலைகளில் தஞ்சம் புகுந்திருந்தார்; அவரை நெருங்கி வந்த IRGC பிரிவுகள் மீது அமெரிக்க விமானப் படை குண்டுகளையும் ஏவுகணைகளையும் வீசி வான் பாதுகாப்பு வழங்கியது.

இதற்கிடையில், ஹெலிகாப்டர்களில் ஒன்று விமானியை மீட்டு மீண்டும் விமான ஓடுபாதைக்குக் கொண்டு சென்றது. இருப்பினும், கிடைத்த அமெரிக்கத் தகவல்களின்படி, இரண்டு போக்குவரத்து விமானங்களும் சேற்றில் சிக்கிக்கொண்டதால் புறப்பட முடியவில்லை. இறுதியில், மீட்கப்பட்ட விமானியையும், இந்த மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சுமார் 100 வீரர்களையும் வெளியேற்றுவதற்காக மூன்று பாம்பார்டியர் டேஷ்-8 டர்போப்ராப் விமானங்கள் அங்கு கொண்டுவரப்பட்டன.



கைவிடப்பட்ட உபகரணங்களை (இரண்டு MC-130J கமாண்டோ II போக்குவரத்து விமானங்கள் மற்றும் நான்கு லிட்டில் பேர்ட் ஹெலிகாப்டர்கள்) அழித்து விட்டதாக அமெரிக்கத் தரப்பு தெரிவித்தது. மேலும், இந்த நடவடிக்கையின் போது, ஒரு A-10C தண்டர்போல்ட் II தாக்குதல் விமானம் (அதன் விமானி நட்புப் பகுதிக்குள் வெளியேறினார்) மற்றும் 4 MQ-9 ரீப்பர் ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன; இரண்டு UH-60 பிளாக் ஹாக் ஹெலிகாப்டர்கள் சேதமடைந்தபோதிலும், அவை தளத்திற்குத் திரும்பின. அதிகாரப்பூர்வ அறிக்கைகளில் எந்த உயிரிழப்பும் குறிப்பிடப்படவில்லை. இஸ்ரேலிய ஹெர்ம்ஸ் 900 உளவு ஆளில்லா விமானம் உட்பட அனைத்தும் ஈரானிய வான் பாதுகாப்புப் படைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன என்பதையே தற்போது கிடைக்கும் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந்த நிலையில் தான் ஏப்பிரல் 4 ஆம் நாள் நள்ளிரவு அமெரிக்கா மிகப்பெரும் நடவடிக்கை ஒன்றிற்கு தயாரானது. ஆனால் இந்த தாக்குதலின் பின்னர் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் ஒரு படை வீரரை மீட்க மேற்கொண்ட நடவடிக்கை போல அது தோன்றவில்லை.

ஏனெனில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்றம்ப் தெரிவித்த விமானங்களின் எண்ணிக்கை இந்த சந்தேகங் களை கிளப்பியுள்ளது. அந்த நடவடிக்கையில் 155 விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பி-52 வகையான நீண்டதூர குண்டுவீச்சு விமானங்கள் 4, போர் விமானங்கள் 64, எரிபொருள் நிரப்பு விமானங்கள் 48, மீட்பு விமானங்கள் 13 உட்பட 155 விமானங்கள்.



மேலும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்ட விமானங்கள் சில ஈரானின் மூன்றாவது பெரிய நகரமான இஸ்பஹான் பகுதியில் உள்ள அணுவாயுத நிலையத்தில் இருந்து ஏறத்தாள 25 மைல்கள் தொலைவில் இருந்த ஈரானினால் கைவிடப்பட்ட சிறிய பழைய விமானநிலையத்தில் தரையிறங்கியிருந்தன. அங்கு டெல்ட்டா, கிறீன் பரட் மற்றும் சிறப்பு படையணியான மரைன் படையணி உட்பட 200 கொமோண்டோக்கள் தரையிறங்கியிருந்தன.

அதாவது இந்த நடவடிக்கை இஸ்பஹானில் உள்ள ஈரானின் 440 கி.லோ யுரேனியத்தை ஒரு கொமோண்டோ நடவடிக்கை மூலம் கைப்பற்றும் நடவடிக்கை என்ற சந்தேகத்தையும் தோற்றுவித்துள்ளது. அமெரிக்காவும் இஸ்ரேலும் அதன் போர் இலக்குகளை ஒன்றை கூட அடையவில்லை என்ற விமர்சனத்தில் இருந்து தப்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டம் அது என கூறப் படுகின்றது.



அதனை கைப்பற்றிவிட்டு தமது இலக்கை அடைந்ததால் போரை முடிவுக்கு கொண்டுவந்துவிட்டதாக ட்றம் அறிவித்திருப்பார் ஆனால் ஈரானின் பதில் தாக்குதலால் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது.

அதாவது இந்த நடவடிக்கை என்பது 1980களில் மேற்கொள்ளப்பட்டு தோல்வியடைந்த ஈகிள் கிளா நடவடிக்கையில் மறு பதிப்பாக மாறியுள்ளது. அந்த நடவடிக்கையின் போது, ஐந்தரை மாதங்களுக்கு முன்பு தெஹ்ரானில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்து கடத்

தொடர்ச்சி: பக்கம் 15

## அமெரிக்காவின் முழு ... தொடர்ச்சி...

தப்பட்ட 53 பணயக்கைதிகளை மீட்க அமெரிக்க சிறப்புப் படைகள் முயற்சித்தன.

அந்த நடவடிக்கையின் திட்டம் ஏறக்குறைய இதே போல்தான் இருந்தது: போக்குவரத்து ஹெலிகாப்டர்களின் ஆதரவுடன் ஒரு அமெரிக்க சிறப்புப் படைக் குழுவிற்கு, கைவிடப்பட்ட விமானத்தளத்தைக் கைப்பற்று வது, ஒரு மீட்புத் தாக்குதலை நடத்துவது, அந்த இடத்திற்குத் திரும்புவது, மற்றும் அவர்களை எகிப்திற்கு வெளியேற்றுவது ஆகிய பணிகள் தாக்குதல் குழுவுக்கு வழங்கப்பட்டன.

இருப்பினும், ஆரம்பத்திலிருந்தே நிலைமை தலை கீழாக மாறியது. எட்டு ஹெலிகாப்டர்களில் ஒன்று விபத்துக்குள்ளானது, மற்றொன்று புழுதிப் புயல் காரண மாகத் திரும்பிச் சென்றது, மேலும் தரையிறங்கும் இடம் பரபரப்பான நெடுஞ்சாலைக்கு மிக அருகில் இருந்ததால், அந்த நடவடிக்கை பாதிக்கப்பட்டது. எரிபொருள் நிரப்பும் போது, ஒரு ஹெலிகாப்டர் எரிபொருள் நிரப்பும் விமானத்து டன் மோதியதில் ஏற்பட்ட தீ விபத்தில் எட்டு அமெரிக்கப் படை வீரர்கள் உயிரிழந்தனர். அந்த நடவடிக்கை இறுதியில் கைவிடப்பட்டது, மேலும் அமெரிக்க உபகரணங்களும் ஆவணங்களும் பாலைவனத்தில் கைவிடப்பட்டு பின்னர் ஈரானியர்களின் கைகளில் சிக்கின.

கடந்த வார இறுதியில் இஸ்பஹான் மீதான தாக்குதல் ஒரு அணுசக்தி நிலையத்தைக் குறிவைத்திருந் தாலோ அல்லது ஒரு உயர் பதவியில் உள்ள ஈரானிய அதிகாரியைக் கைப்பற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந் தாலோ, அதன் விளைவு ஒரே மாதிரியாகவே தெரிகிறது அதாவது நோக்கங்கள் அடையப்படவில்லை.

அமெரிக்கா தனது தேடப்படும் நபரை மீட்டது. ஆனால், ஈரானுடனான அதன் முழு அணுகுமுறையையும் மாற்றியமைக்கக்கூடிய ஒரு விலையை செலுத்தியிருந்தது. இஸ்பஹான் அருகே நடைபெற்ற இந்த நடவடிக்கையின், அதன் அதிக இழப்புக்கள் மற்றும் செலவுகள் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும். தரைவழிப் படையெடுப்புகளை எதிர்கொள்ளும் தனது மீள்திறனை ஈரான் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளது.

இந்த நடவடிக்கையில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானங்களால் எண்ணிக்கை என்பது அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய விமானப்படைகள் ஈரானின் வான்பரப்பில் சுதந்திரமாகச் செயல்படுவதை மேலும் மேலும் கடின மாக்கியுள்ளது. வீழ்த்தப்படும் ஒவ்வொரு விமானமும் அமெரிக்க விமானப்படையால் கூட இந்தத் திட்டத்தை நீண்ட காலத்திற்குத் தொடர முடியாது என்பதை காட்டுகின்றது. 30,000 அடி உயரத்தில் பறந்த F-15E விமானத்தை தோளில் வைத்து இயக்கப்படும் ஏவுகணையால் சுட முடியாது. எனவே அது ரஸ்யாவின் எஸ்-300 பி.எம்.யூ-2 என்ற நீண்ட தூர ஏவுகணையினால் தான் சுடப்பட்டிருக்க வேண்டும் என்பதும் அதிர்ச்சியான தகவல். மேலும், ஈரானியப் பிரதேசத்தின் ஆழத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பெரிய அளவிலான சிறப்பு நடவடிக்கையின் வெற்றியும் இப்போது மிகவும் கேள்விக்குரியதாகத் தெரிகிறது.

இந்தத் தோல்வியின் நீடித்த சின்னங்களில் ஒன்றாக, இஸ்பஹானில் உள்ள அமெரிக்க இராணுவ ஜெட் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களின் கருகிய எச்சங்கள் இருக்கும்.

அதாவது இந்த நடவடிக்கையின் தோல்வியுடன் போரை அமெரிக்கா நிறுத்திவிட்டது ஆனால் இந்தத் தோல்வியின் நீடித்த சின்னங்களில் ஒன்றாக, இஸ்பஹானில் உள்ள அமெரிக்க இராணுவ ஜெட் விமானங்கள் மற்றும் ஹெலிகாப்டர்களின் கருகிய எச்சங்கள் இருக்கும்.

• • •

## ஈரான் போரினால் ... தொடர்ச்சி...

துறைமுகம், இப்போது ஒருவித அமைதியற்ற நிசப்தத்தை வெளிப்படுத்துகிறது.

துறைமுகத்தின் டீசல் பம்ப், வாடிய சாமந்திப் பூ மாலையால் அலங்கரிக்கப்பட்ட நிலையில் கைவிடப் பட்டுக் காட்சியளிக்கிறது. ஒரு தொழிலாளி, தனது மர வண்டியில் நிரப்பப்படாத ஆறு கொள்கலன்களுடன் பெட்ரோல் நிலையத்திலிருந்து வெறுங்கையுடன் திரும்பினார். டீசல் விலை ஒரு லிட்டருக்கு $1.20 ஐத் தாண்டி உயர்ந்துள்ளது. இது, வழக்கமாக மீனவர்களுக்கு மலிவு விலையில் எரிபொருள், பனிக்கட்டி மற்றும் உபகரணங்களை வழங்கும் கூட்டுறவு சங்கங்களை நிலைகுலையச் செய்துள்ளது.

இந்த நெருக்கடி மும்பையைத் தாண்டி, இந்தியா மற்றும் ஆசியா முழுவதும் உள்ள மீனவ சமூகங்களைப் பாதிக்கிறது. மீனவர்கள் ஒரு கடுமையான இக்கட்டான நிலையை எதிர்கொள்கின்றனர்: கரையிலேயே தங்கு வதா அல்லது கடலில் நிதி இழப்பைச் சந்திப்பதா? இது தனிநபர்களின் வாழ்வாதாரத்திற்கும் ஒட்டுமொத்த கட லோர சமூகங்களுக்கும் அச்சுறுத்தலாக உள்ளது.

## போர் நிறுத்தத்திற்குப் ... தொடர்ச்சி...

ஈரானை உறுதியாகத் தோற்கடிப்பதற்கு அவர்களிடம் தற் போது தெளிவான வழி இல்லை.

யதார்த்தமாகப் பார்த்தால், அணு ஆயுதத் தாக்குதல் இல்லாத நிலையில், கூட்டணிக்கு இரண்டு முக்கிய வழிகள் உள்ளன. முதலாவது, "ஈரானை மீண்டும் கற்காலத்திற்குத் தள்ளும்" நோக்கில் தீவிரமான மூலோபாய குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்துவதாகும். அதற்கு, அமெரிக்காவின் மூலோபாய குண்டுவீச்சு விமானங்கள் ஈரானியப் பகுதிக்கு நேராக மேலே செயல்பட வேண்டியிருக்கும் – இது ஒரு அபாயகரமான செயல் என்பதை இஸ்பஹான் அருகே நடந்த சம்பவம் நிரூபித்தது. அத்தகைய சூழ்நிலைகளில், B-52 குண்டுவீச்சு விமானங்கள் நவீன போர் விமானங்களை விட எளிதில் தாக்கப்படக்கூடியவையாக இருக்கும் – ஒப்பீட் டளவில் காலாவதியான வான் பாதுகாப்பு அமைப்புகளால் கூட, அவை பயணிகள் விமானங்களைப் போலவே எளி தாகச் சுட்டு வீழ்த்தப்படக்கூடியவை.

இதற்கிடையில், ஈரானின் ஏவுகணைத் திறன்கள் தப்பிப்பிழைத்தது மட்டுமல்லாமல், மீட்சி மற்றும் அதிகரித்த செயல்பாட்டு வேகத்தின் அறிகுறிகளையும் காட்டியுள்ளன. மேலும், அமெரிக்கப் படைகளால் ஈரானின் ஆளில்லா விமான ஏவுதல் உள்கட்டமைப்பை (ஷாஹெட் வகை ஆளில்லா விமானங்கள் உட்பட) தீவிரமாகச் சீர்குலைக்க முடியவில்லை. இதன் பொருள், எந்தவொரு பெரிய அளவிலான குண்டுவீச்சுத் தாக்குதலும், குறிப்பாக எண் ணெய் உற்பத்தி செய்யும் அரபு முடியாட்சிகளுக்கு எதிராக, குறிப்பிடத்தக்க பதிலடி சேதங்களைத் தூண்டும் அபாயத்தைக் கொண்டுள்ளது. இது உலகளாவிய எண்ணெய் நெருக்கடியை நீட்டித்து ஆழப்படுத்துவதோடு, உலகை ஒரு நிதி நெருக்கடியை நோக்கித் தள்ளவும் கூடும்.

இஸ்ரேலும் பாதிப்புக்குள்ளாகும். அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்கான யூத நிறுவனத்தை மேற்கோள் காட்டி ஜேபிமோர்கன் வெளியிட்ட அறிக்கையின்படி, இஸ்ரேலிய வான் பாதுகாப்பு அமைப்புகளில் ஏற்பட்ட அழுத்தம் மற்றும் பலவீனம் காரணமாக, இஸ்ரேலியப் பிரதேசத்தின் மீதான ஈரானியத் தாக்குதல்களின் வெற்றி விகிதம், போரின் தொடக்கத்தில் 3% ஆக இருந்து, மார்ச் பிற்பகுதி மற்றும் ஏப்ரல் தொடக்கத்தில் 27% ஆக உயர்ந்துள் ளது.

இரண்டாவது வழி – ஈரானின் கடற்கரையோர மாகவோ அல்லது ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுகளுக்கு எதிராகவோ மேற்கொள்ளப்படும் ஒரு பெரிய அளவிலான தரைவழி நடவடிக்கை – வான்வழிப் போரின் அனைத்து அபாயங்களையும், தவிர்க்க முடியாத பெரும் உயிரிழப்புகளையும் கொண்டுள்ளது. இதில் உள்ள நன்மை என்ன? அடிப்படையில் ஒன்றுமில்லை. வரையறுக்கப்பட்ட நீர்நிலத் தாக்குதல்கள் சிறிதளவே சாதிக்கும், அதே நேரத்தில் ஆட்சி மாற்றத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு முழு அளவிலான படையெடுப்பு சாத்தியமற்றது.

இவை எதுவும் பதற்றத்தை அதிகரிக்கும் வாய்ப்பு இல்லை என்பதைக் குறிக்கவில்லை. இதன் பொருள் என்னவென்றால், பதற்றம் அதிகரிப்பதற்கு முன்பு, அமெரிக்க மற்றும் இஸ்ரேலியத் தலைமைகள், போரின் தொடக்கத்தில் தாங்கள் எதிர்கொண்ட அதே சமன்பாட்டிற்குத் தீர்வு காண வேண்டியிருக்கும் – ஆனால் இப்போது, அறியப்படாத காரணிகள் மிகவும் குறைவாக இருக்கும். ஈரானின் மீள்திறன், அதன் இராணுவத் திறன்கள், மற்றும் அமெரிக்க-இஸ்ரேலிய சர்வதேசத் தனிமைப்படுத்தலின் அளவு ஆகியவை இப்போது மிகவும் தெளிவாக உள்ளன.

ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக கப்பல் போக்கு வரத்து மீண்டும் தொடங்கி, பின்னர் அமெரிக்க அல்லது இஸ்ரேலிய நடவடிக்கைகளால் மீண்டும் தடைபட்டால், ஒரு உலகளாவிய பொருளாதார நெருக்கடியைத் தூண்டியதற்கு அவர்களே பரவலாகப் பொறுப்பானவர்களாகக் கருதப் படுவார்கள்.

### சூழ்நிலை 3: ஹோர்முஸ் ஈரானின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது குறைந்த அளவிலான மோதல்கள்

இது அடிப்படையில் முதல் சூழ்நிலையின் ஒரு மாறு பாடு – மேலும், எங்கள் பார்வையில், இதுவே மிகவும் சாத்தியமான ஒன்றாகும். உண்மையில், இது ஏற்கனவே அரங்கேறுவது போல் தெரிகிறது: புதிய தாக்குதல்கள் மூலம் போர்நிறுத்தத்தை மீறியதாக ஈரான் மீது குற்றம் சாட்டுகிறது, மேலும் பதிலடி கொடுக்க அச்சுறுத்துகிறது (அநேகமாக தயாராகியும் வருகிறது).

ஹோர்முஸ் ஜலசந்தி வழியாக போக்குவரத்து ஏறக்குறைய தடையின்றி தொடர்ந்தால், தொடர்ச்சியான பதற்றம் மற்றும் அவ்வப்போதைய மோதல்கள் ஒரு புதிய இயல்பான நிலையாக மாறக்கூடும். இஸ்ரேல் தாக்குதல்களை நடத்துகிறது (அல்லது தாங்கள் தாக்கப் பட்டதாக ஈரான் கூறுகிறது); ஈரான் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு ஜலசந்தியை தற்காலிகமாக மூடுவதன் மூலம் பதிலளிக்கிறது – ஒருவேளை தனது சொந்த பதிலடித் தாக்குதலையும் நடத்தக்கூடும்.

சில வாரங்கள் அல்லது மாதங்களுக்குப் பிறகு, இந்த வகையான செய்திகள் வெறுமனே பின்ன ணிக்கு மங்கிவிடுகின்றன – இது ஒரு நிலையான, குறைந்த அளவிலான அபாயமாக மாறுகிறது. அந்தப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மை குறைகிறது, ஆனால் பாரசீக வளைகுடாவிலிருந்து எண்ணெயும் பிற வளங்க ளும் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருக்கும் வரை, உலகின் மற்ற பகுதிகள் இதைப் பெரும்பாலும் கண்டுகொள் வதில்லை.

**நன்றி ரஸ்யா ருடே**

## பொறுப்புக்கூறலை ... தொடர்ச்சி...

வில்லை' என்றே அவர்கள் வாதிட்டனர்.

இருப்பினும், தரமற்ற நிலக்கரியினால் ஏற்பட்ட 8.5 பில்லியன் ரூபா இழப்பானது பாரிய நிதிச் சுமையாகும். இந்தத் தரம் குறைந்த நிலக்கரியை எரிப்பதன் மூலம் மின் நிலைய இயந்திரங்களுக்கு ஏற்படும் நீண்டகாலப் பாதிப்புகள் பற்றிக் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோன்று, நிலக்கரியை பயன்படுத்தும்போது வெளி யேறும் சாம்பலின் அளவு 25 சதவீதம் வரை அதிகரித்ததால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுகள் என்பன மிகவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவையாகும். டீசல் மூலம் மேலதிக மின்சாரத்தை உற்பத்தி செய்ய நாளொன்றுக்கு 50 மில்லி யன் ரூபா கூடுதல் செலவிடப்படுவதும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் அஜித் பி. பெரேரா ஆகியோர் முன்வைத்த வாதங்களின் படி, ஒரு அமைச்சர் சட்டத்திற்கும் பாராளுமன்ற நடத்தைக் கோவைக்கும் அப்பாற்பட்டவர் அல்லர். ஆகவே சட்ட நட வடிக்கைகளை முன்னெடுப்போம் என்றனர்.

அதேநேரம் ஆளும் தரப்பினர் ஊழல், மோசடி கள் நடைபெற்றால் 'எதிர்க்கட்சியினர் குறிப்பிடும் வரை நாம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம், கட்சி மட்டத்தில் நடவடிக்கை எடுப்போம்' என்று திடமாகக் கூறினார்கள். ஆனால் 153 வாக்குகளைப் பயன்படுத்தி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்தமை யானது ஒருவகை பெரும்பான்மைவாதம் தான்.

தரவுகளின் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட நிர் வாகத் தோல்விகளை அரசியல் பலத்தால் மூடிமறைக்க முயற்சிப்பது, ஊழலுக்கு எதிரான மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்திற்கு உகந்த பண்பல்ல. ஊழல் எதிர்ப்பு என்பது முந்தைய ஆட்சியை விமர்சிப்பது மட்டுமல்ல, தற்போதைய ஆட்சியில் நிகழும் தவறுகளுக்கும் பொறுப்பேற்பதாகும்.

இந்த விவாதத்தின் போது வெளிவந்த மற் றொரு முக்கிய அம்சம் என்னவென்றால், நிலக்கரி விநியோகஸ்தர்களுக்கான தகுதி நிபந்தனைகள் வேண்டு மென்றே தளர்த்தப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டாகும்.

முறையான தொழில்நுட்ப அல்லது சட்ட ஆலோசனைகள் இன்றி விநியோக அனுபவ நிபந்தனை கள் மாற்றப்பட்டதாகத் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

மேலும், சட்டமா அதிபரின் அனுமதி பெறுவதற்கு முன்னரே உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தகவல்கள், நிர்வாக நடைமுறைகளில் நிலவும் அவசரத்தையும் அலட்சியத்தையும் காட்டுகின்றன.

இத்தகைய சூழலில், அரசாங்கம் முன்மொழியும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவானது 2010 முதல் விசாரணைகளை முன்னெடுக்கும் போது, தற்போதைய அமைச்சரின் மீதான குற்றச்சாட்டுகள் அந்தப் பெரும் பட்டியலில் ஒன்றாக மாற்றப்பட்டு அதன் தீவிரம் குறைக்கப் படலாம்.

ஆக, இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்ட விதம் இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் தார்மீகப் பொறுப்புக்கூறல் இன்னும் கேள்விக்குறியாகவே உள்ளதை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

நிதி இழப்புகள் மற்றும் நிர்வாக முறைகேடுகள் குறித்த கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் அறிக்கைகள் சபையில் பகிரங்கமாக முன்வைக்கப்பட்ட போதிலும், அரசியல் கூட்டுப் பொறுப்பு என்ற போர்வையில் அவை நீர்த்துப்போகச் செய்யப்பட்டுள்ளன.

குறித்த விடயம் சம்பந்தமாக விசாரணைகள் ஒருபுறம் நடந்தாலும், வெளிப்படையான எண்மிய கொள்முதல் முறைகள் மற்றும் தார்மீகப் பொறுப்பேற்றல் என்பன நடைமுறைக்கு வரும் வரை, இது போன்ற விவாதங்கள் பெரும்பான்மைவாதத்தால் வெறும் சடங்குகளாகவே முடிவுக்கு வந்துவிடும்.

அரசாங்கம் தனது ஊழல் எதிர்ப்பு கொள்கையை மெய்ப்பிக்க வேண்டுமானால், விசாரணைகளில் தவறு கண்டறியப்படும் பட்சத்தில் தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை எடுப்பதே மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்கான ஒரே வழியாகும்."

## அரசாங்கத்தின் 'விசேட ... தொடர்ச்சி...

தவறியதை இது காட்டுகிறது.

தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் 'குடிமக்கள்' என்பதை விட 'தோட்ட வதிவிடதாரர்களாக' மட்டுமே பார்க்கப்படும் நிலையை இது மாற்ற முற்படுகிறது. இந்த அறிக்கையின் மிக முக்கியமான அம்சம் '10 பேர்ச்சஸ் காணி' தொடர்பான முடிவாகும். பெருந்தோட்ட தொழிலாளர்கள் தற்போது வசிக்கும் லயன் குடியிருப்புகள் என்பவை ஒரு சிறிய அறையை மட்டுமே கொண்டவை, அதன் நிலம் கம்பனிக்குச் சொந்தமானது.

ஆனால் 10 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும்போது, ஒரு தொழிலாளி அந்த நிலத்தின் உரிமையாளராக மாறுகிறார். எவ்வாறாயினும் அவ்வாறு வழங்கப்படுகிற காணிக்கு உறுதி பத்திரம் வழங்கப்படுமா? என்ற அச்சமும் நிலவுகிறது.

மறுபுறம் மண்சரிவு மற்றும் வெள்ள அபாயம் உள்ள இடங்களிலிருந்து மக்களை அப்புறப்படுத்தி, "பாது காப்பான இடங்களில்" காணி வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை, அவர்களின் உயிர் பாதுகாப்பை உறுதி செய்கிறது. குறிப்பாக மலையகப் பகுதிகளில் பெரும்பாலான தோட்டக் குடியிருப்புகள் சரிவான மற்றும் பாதுகாப்பற்ற மலைப்பாங்கான பகுதிகளில் அமைந்துள்ளன.

புயல் மற்றும் கடும் மழைக் காலங்களில் இந்த மக்கள் நிலச்சரிவு அபாயத்தை நேரடியாக எதிர் கொள்கின்றனர். அமைச்சரவை அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது போல், பல வீடுகள் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ சேதமடைந்து 'பயன்பாட்டு காலம்' முடிவடைந்த நிலையில் உள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட 10க்கு 12 அடி அளவுள்ள லயன் அறைகளில் இன்றும் பல குடும்பங்கள் ஒன்றாக வாழ வேண்டிய அவலநிலை உள்ளது.

இந்த வீடுகளில் போதிய, சுகாதாரம் அல்லது தனிமனித இடைவெளி கிடையாது. இது அம்மக்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில் பெரும் தாக் கத்தை ஏற்படுத்துகிறது. இவ்வாறு இருக்கையில் அரசாங் கத்தின் இந்த தீர்மானம் ஒரு சாதக விடயமாகவே கருத வேண்டியுள்ளது. இதேவேளை, அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ள ஒரு நுணுக்கமான விடயம்: "தோட்டத் தொழிலாளரின் சேவை தொடர்ந்தும் தேவையல்லவென தோட்டக் கம்பனி தீர்மானிக்கின்ற போது." என்பது. மலை யகத்தில் ஒரு தொழிலாளி வேலையிலிருந்து ஓய்வு பெற்றாலோ அல்லது நீக்கப்பட்டாலோ, அவர் தனது குடியிருப்பையும் காலி செய்ய வேண்டும் என்ற எழுதப்படாத விதி உள்ளது.

ஆனால் இந்த புதிய தீர்மானம், வேலையை இழந்தாலும் தொழிலாளிக்குக் காணி கிடைப்பதையும் அல்லது அவர் அந்தப் பணத்தைக் கொண்டு வெளியே காணி வாங்குவதையும் உறுதிப்படுத்துகிறது. இது தொழி லாளர்களைக் கம்பனிகளின் பிடியிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு நிலத்தின் மீதான சுதந்திரத்தை வழங்குகிறது. அதேநேரம், 650 சதுர அடி, இது ஒரு சிறிய குடும்பம் கௌரவமாக வாழ்வதற்குத் தேவையான குறைந்தபட்ச இடவசதியாகும்.

லயன் அறைகளின் குறுகிய சூழலோடு ஒப்பிடும்போது இது ஒரு பாரிய முன்னேற்றம். இவ் வாறான சாதக அம்சங்கள் காணப்படுகின்ற போதும் அரசாங்கம் ஒதுக்குவதாக கூறுகின்ற 5 மில்லியன் ரூபாய் என்பது தற்போதைய கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்துடன் ஒப்பிடுகையில் போதுமானதா? என்பது கேள்விக்குறியே. இருப்பினும், இது ஒரு ஆரம்பக் கட்ட ஊக்கத்தொகையாகவும், காணி உரிமைக்கான அங்கீகாரமாகவும் அமைகிறது.

எனினும் இதனை நிலமட்டத்தில் நடைமுறைப் படுத்துவதில் பல சவால்கள் உள்ளன. காணி வழங்குவதில் தோட்டக் கம்பனிகள் காட்டும் தயக்கம் மற்றும் இழுபறி நிலைகள் இத்திட்டத்தைத் தாமதப்படுத்தலாம். ஏற்கனவே இந்திய வீட்டு திட்டத்தில் இந்த இழுபறி நிலை காணப்படுகின்றது. குறிப்பாக இந்திய வீட்டு திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் வீடுகளுக்கான காணிகள் பெரும்பாலும் தேயிலை உற்பத்தி செய்ய முடியாத கைவிடப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற காணிகளாகவே உள்ளன.

இந்த நிலை தற்போதைய அரசாங்கத்தின் திட்டத்திலும் நீடிக்குமாயின் மீண்டும் ஒருமுறை மலையக பெருந்தோட்ட மக்களின் எதிர்பார்ப்பு கேள்வி குறியாகும். பெருந்தோட்ட மக்களின் வீட்டுப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க வெறும் நிதி ஒதுக்கீடு மட்டும் போதாது. அதற்கான ஒரு விரிவான கட்டமைப்பு தேவையாக உள்ளது. வழங்கப்படவுள்ள 10 பேர்ச்சஸ் காணிக்குத் தெளிவான மற்றும் சட்டபூர்வமான உறுதிப்பத்திரங்கள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

தோட்டக் குடியிருப்புகளை 'கிராமங்களாக' அங்கீ கரிப்பதன் மூலம், பிரதேச செயலகங்கள் ஊடாக அரச அபிவிருத்தித் திட்டங்கள் நேரடியாக மக்களைச் சென்ற டையச் செய்ய வேண்டும். இந்த அமைச்சரவை முடிவானது, பெருந்தோட்ட மக்களின் காணி உரிமையை நோக்கிய பயணத்தில் ஒரு மைல்கல். எனினும், அறிக்கை சொல்வது போல இந்த 10 பேர்ச்சஸ் காணிக்குரிய சட்டபூர்வமான உறுதிப்பத்திரம் வழங்கப்படுவதை அரசாங் கம் உறுதி செய்ய வேண்டும். அப்போதுதான், அந்த மக்கள் நிம்மதியாகத் தமது சொந்த நிலத்தில் தலைமுறை தலை முறையாக வாழ முடியும்."

• • •

## வெடுக்கு நாறிமலை ... தொடர்ச்சி...

காணப்பட்டுள்ளன. இது கி.மு. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குகை கல்வெட்டுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டவிரோத கட்டுமானங்களால் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ளன.

இத்தகைய கட்டுமானங்கள் அந்த இடத்தின் தொல் பொருள் நிலப்பரப்பை சேதப்படுத்தியுள்ளன. இது தொடர்பாக தொல்பொருள் திணைக்களம் ஏற்கனவே சட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எவரேனும் இந்த இடத்தில் மத வழிபாடுகளைச் செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால் அவ்வாறு செய்யும் போது தொல்பொருட்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது "என்று பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

## வலுசக்தி அமைச்சருக்கு ... தொடர்ச்சி...

முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை முழுமையாக ஆதரித்து பாராளுமன்றத்தில் கருத்துரைப் பது என்றும், அந்தப் பிரேரணையை ஆதரித்து வாக்க ளிப்பது என்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்தது.

கட்சியின் அரசியல் குழுவும் பாராளுமன்ற உறுப் பினர்களும் இணைய வழியில் கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்தனர். இணைய வழியில் கூட்டத்தில் பங்கு பற்றிய அனைத்து உறுப்பி னர்களுமே ஏகமனதாக இந்த முடிவுக்கு வந்தனர்.

## தலைவர் பிரபாகரனைக் ... தொடர்ச்சி...

இந்த மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் வழங்கப்பட்ட பதில்களுக்கும் அப்பால், தலைவரின் அணுகுமுறை உலக ஊடகங்களை ஆச்சரியப்படுத்தியது. எந்தவொரு கட்டத்திலும் உணர்ச்சி வசப்படாமல், மிக அமைதியான மற்றும் தெளிவான மொழியில் அவர் பதிலளித்தார். இது ஒரு இராணுவத் தலைவரை விட ஒரு முதிர்ந்த நாட்டின் தேசிய தலைவர் மற்றும் இராஜதந்திரி என்ற படிமத்தை உருவாக்கியது.

பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் என்ன செய்வீர்கள் என்ற கேள்விக்கு, "சமாதான முயற்சிகளைத் தொடர்வோம்"என்றபதில்,உலகிற்குஒருஅரசியல்செய்தியா கவே அமைந்தது. அது மாத்திரமின்றி வீரமும் விவேகமும் கொண்ட பதில்களும் இராஜதந்திரமும் போராட்ட ஓர்மமும் கொண்ட பதில்களும் அரசியல் தீர்க்கதரிசனம் கொண்ட பதில்களும் சிங்கள ஊடகவியலாளர்களையும் உலக ஊடகவியலாளர்களையும் பிரமிக்க வைத்தது. அதேபோல், உள்நாட்டு அரசியல் குறித்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போது கூட தலைவர், மிக நுணுக்கமாகப் பேசியிருந்தார்.

### தலைவரைக் கண்டு வியந்த சிங்களவர்கள்

சிங்கள ஆட்சியாளர்கள் மற்றும் சிங்கள ஊடகங்களின் முக்கிய உத்திகளில் ஒன்று, விடுதலைப்புலிகளை மர்மம் சூழ்ந்த சக்தியாக காட்டுவதும் பேசுவதும் ஆகும். ஆனால், இந்த மாநாடு அந்த மர்மத்தை பெருமளவில் கலைத்தது. தலைவரின் நேரடி தோற்றம், அவரது பேச்சு நடை, மற்றும் பதில்களின் தெளிவு ஆகியவை சிங்கள ஊடகவியலாளர்கள் மத்தியில் பெரும் ஈர்ப்பையும் வியப்பையும் ஏற்படுத்தியது. ஒரு சிங்கள ஊடகவியலாளர், "அரசும் சிங்கள ஊடகங்களும் தந்த கற்பனைகளுக்கு மாறாக, அவர் மிகவும் சாதாரணமாகவும் தெளிவாகவும் காட்சியளித்தார்" எனப் பதிவிட்டிருந்தார்.

உலகில் ஒரு செய்தியாளர் மாநாடு ஒரு அரசியல் அடையாளமாக மாத்திரமின்றி, ஒரு போராட்டச் செயல் முறையாக மாத்திரமின்றி, இன்றுவரை நினைவு கொள்கிற வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வாகவும் நடந்தது தலைவர் அவர்களின் இச் செய்தியாளர் மாநாடு மாத்திரமே. அத்தோடு அதுவே தமிழர் தேச அரசியல் அடையாளம் உலக அரங்கில் வெளிப்படையாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு தருணமாகும். தமிழர் தேசம் என்பது ஒரு கோரிக்கையாக மாத்திரமின்றி உலகம் கவனிக்க வேண்டிய அரசியல் யதார்த்தமாக அந்நாளில் வெளிப்பட்டது. ஈழ விடுதலைப் போராட்டத்தின் தேசத் தலைவரின் முகம் உலகப் பந்தில் விரிந்து ஒளிபரப்பிய நாளென ஏப்ரல் 10 வரலாற்றில் நிலைத்திருக்கிறது.






## தமிழ்நாட்டில் ஈழத்தமிழ் ... தொடர்ச்சி...

சைப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

- சிறப்பு அங்கீகாரம்: விண்ணப்பத்தில் "இலங்கை அகதி" பிரிவைத் தேர்வு செய்து, வட்டாட்சியர் அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கலாம்.
- விண்ணப்பக் கட்டணம்: பொதுப் பிரிவினருக்கு முதலில் இந்திய ரூபா ₹1000 மற்றும் எஸ்சி/எஸ்டி பிரிவினருக்கு ₹500 வசூலிக்கப்படுகிறது.

### பிற தொழில்முறைப் படிப்புகள்: பொறியியல் மற்றும் மேலாண்மை

அகதி மாணவர்கள் பொறியியல் மற்றும் மேலாண்மைப் படிப்புகளில் (MBA/MCA) சேருவதற்கு "டான்செட்" (TANCET) போன்ற பொது நுழைவுத் தேர்வுகளை எழுத அனுமதிக்கப்படுகின்றனர். இதேபோல் மீன்வளப் பல்கலைக்கழகம் (TNJFU) மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்றவற்றிலும் "வெளிநாட்டுத் தேசியத்தவர்" பிரிவின் கீழ் இடங்கள் வழங்கப்படுகின்றன.

### அரசு மற்றும் தன்னார்வ அமைப்புகளின் பங்களிப்பு

தமிழ்நாடு அரசு அகதி முகாம்களை "மறுவாழ்வு முகாம்கள்" என்று பெயர் ஈழ அகதிகள் மறுவாழ்வு அமைப்பு (OfERR) இதில் பாலமாகச் செயல்படுகிறது.

**OfERR அமைப்பின் முக்கியப் பணிகள்:**

- தற்போது 22,994 அகதி மாணவர்கள் பல்வேறு கல்வி நிறுவனங்களில் பயில உதவி செய்கிறது.
- "எக்குமெனிகல் ஸ்காலர்ஷிப் புரோகிராம்" மூலம் மருத்துவ மற்றும் பொறியியல் மாணவர்களுக்கு நிதி உதவி அளிக்கிறது.
- பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.

### சமூக-பொருளாதாரச் சவால்கள் மற்றும் உளவியல் தாக்கம்

**முகாம்களில் வாழும் மாணவர்களுக்குப் பொருளாதாரம் ஒரு பெரிய தடையாகும்:**

- நிதி நெருக்கடி: முகாம் குடியிருப்பாளர்களின் குறைந்த வருமானம் தொழில்முறைப் படிப்புக் கட்டணத்திற்குப் போதுமானதாக இருப்பதில்லை.
- வங்கிச் சிக்கல்கள்: கணக்கு தொடங்குதல் மற்றும் கடனுதவி பெறுவதில் உள்ள சட்டப் போராட்டங்கள்.
- வேலைவாய்ப்பு: அரசுப் பணிகளில் சேர முடியாததால் தனியார் நிறுவனங்களையே நம்ப வேண்டிய நிலை.
- நிச்சயமற்ற தன்மை: குடியுரிமை இல்லாத நிலை மாணவர்களிடையே எதிர்காலம் குறித்த பயத்தை உருவாக்குகிறது.

### இந்தியாவில் உள்ள அகதிப் பிரிவுகளின் ஒப்பீடு

**மற்ற அகதிகளுடன் ஒப்பிடும்போது ஈழத்தமிழர்களின் நிலை பின்வருமாறு உள்ளது:**

- திபெத்திய அகதிகள்: பதிவுச் சான்றிதழ் (RC) பெற்றுள்ளனர், பயண ஆவணங்கள் மூலம் வெளிநாடு செல்லலாம், உயர்கல்வியில் முழு அனுமதி உண்டு.
- ஈழத்தமிழ் அகதிகள்: முகாம் சான்றிதழ் மட்டுமே உண்டு, வெளிநாடு செல்ல அனுமதி இல்லை, தொழில்முறைப் படிப்புகளில் நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி வழங்கப்படுகிறது.
- ரோஹிங்கியாக்கள்: ஐநா அடையாள அட்டை (UNHCR) மட்டுமே உண்டு, கல்வி மற்றும் இதர உரிமைகள் மிகக் குறைவாகவே உள்ளன.

தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த ஈழத்தமிழ் மாணவர்களுக்கு உயர்கல்விக்கான கதவுகள் திறந்திருந்தாலும், அவை இன்னும் பல நிபந்தனைகளுக்கு உட்பட்டே உள்ளன. குறிப்பாக மருத்துவப் படிப்பு இன்னும் எட்டாக்கனியாகவே தொடர்கிறது. 2025-ஆம் ஆண்டு விலக்கு ஆணை ஒரு நல்ல தொடக்கமாகும். மாணவர்களுக்கு நீண்டகால விசா (LTV) வழங்குவது மற்றும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் சிறிய அளவிலான இடஒதுக்கீடு வழங்குவது அவர்களின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும். கல்வி என்பது இவர்களுக்கு வெறும் அறிவு மட்டுமல்ல, அது ஒரு சமுதாயத்தின் அடையாள மீட்புக்கான கருவியாகும்.

• • •

## போர் எப்படித் ... தொடர்ச்சி...

ஆட்சி மாற்றம் கைக்கு எட்டும் தூரத்தில் உள்ளது என்று அவர் ட்ரம்பிடம் கூறுகிறார். ஏவுகணைத் திட்டத்தை சில வாரங்களில் அழித்துவிடலாம். ஈரானால் ஹோர்முஸை மூட முடியாது. அமெரிக்க நலன்களுக்கு எதிரான பதிலடி "மிகக் குறைவாகவே" இருக்கும்.

ட்ரம்பின் பதில்: "எனக்கு இது சரியாகத் தெரிகிறது." அந்த உறுதிமொழிகள் ஒவ்வொன்றும் தவறானவை என்று நிரூபிக்கப்பட்டன. ஈரான் ஹோர்முஸை மூடியது. பதிலடித் தாக்குதல்கள் ஆறு நாடுகளைத் தாக்கின. ஏவுகணைத் திட்டம் நிலத்தடியில் தப்பியது.

ஆட்சி கவிழ்வதற்குப் பதிலாக அதிகாரத்தை வலுப்படுத்தியது. மேலும் 44 நாட்களுக்குப் பிறகு, ஈரானின் நிபந்தனைகளின் பேரில் ட்ரம்ப் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டார்.

பெப்ரவரி 26 நடவடிக்கை அறையின் ரூமின் இறுதிக் கூட்டம். ட்ரம்ப் மேசையைச் சுற்றி வருகிறார். வான்ஸ்: "இது ஒரு மோசமான யோசனை என்று எனக்குத் தெரியும், ஆனால் நீங்கள் இதைச் செய்ய விரும்பினால், நான் உங்களை ஆதரிப்பேன்." ரூபியோ: "ஆட்சி மாற்றம்தான் நோக்கம் என்றால், நாம் இதைச் செய்யக் கூடாது." தகவல் தொடர்பு இயக்குநனர் செங், ஈரானிய அணுசக்தி நிலையங்கள் அழிக்கப்படும் என்று எட்டு மாதங்களாக அவர்கள் கூறிவந்த அனைத்திற்கும் இது முரணானது என்று எச்சரித்தார். "உச்சத் தலைவரைக் கொல்வது மட்டுமே நமது நோக்கமாக இருந்தால்" ஆட்சி மாற்றம் சாத்தியம் என்று சிஐஏ இயக்குநனர் கூறினார்.

யாரும் மறுக்கவில்லை. அனைவரும் ஜனாதிபதியின் உள்ளுணர்வுக்கு மதிப்பளித்தனர். வரலாற்றிலேயே மிகப்பெரிய எண்ணெய் விநியோகத் தடையை நிர்வகிக்க வேண்டிய இருவரான கருவூலச் செயலாளரும் எரிசக்திச் செயலாளரும் அந்த அறையில் கூட இல்லை.

தேசிய உளவுத்துறை இயக்குநரும் இல்லை. அடுத்த நாள், இராணுவக் காலக்கெடுவிற்கு 22 நிமிடங்களுக்கு முன்பு, ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்தில் இருந்து ட்ரம்ப் ஆறு வார்த்தைகளை அனுப்பினார்: "ஆபரேஷன் எபிக் ஃபியூரிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கைவிடுதல்கள் இல்லை. நல்வாழ்த்துக்கள்."

## இலங்கையை வாட்டும் ... தொடர்ச்சி...

வளங்கள் யுத்தத்தால் சிதைக்கப்பட்டது ஒரு வரலாற்றுச் சோகமாகும். தற்போது யுத்தம் முடிவுக்கு வந்தாலும், இழந்த காடுகளையும் வளங்களையும் மீட்டெடுப்பது எமது கடமையாகும். முறையான காடாக்கம் மற்றும் இயற்கை பாதுகாப்பு சட்டங்கள் மூலம் மட்டுமே கிழக்கின் இழந்த எழிலை நாம் மீண்டும் பெற முடியும்.

கிழக்கில் காடுகள் மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டு மானால் தமிழீழ விடுதலைப்புலிகள் முன்னெடுத்த பசுமை புரட்சி வேலைத்திட்டம் கிழக்கில் மீண்டும் முன்னெடுக்கப்படவேண்டும். காடுகளை மீள உரு வாக்கு தல், வீதிகளின் இருமருங்கிலும் மரங்களை நடுதல், சிறுகுளங்களை மக்கள் பங்களிப்புடன் புனரமைப்புச்செய்து மழை நீரை சேகரித்தல்,விவசாய நிலங்களில் தொடர்ச்சி யான மீள் உற்பத்திகளை முன்னெடுத்தல் போன்ற பல் வேறு திட்டங்களை முன்னெடுப்பதன் மூலமாக கிழக்கு மாகாணத்தின் இயற்கையினை ஓரளவு பாதுகாப்பதற்கான வழிகள் காணப்படுகின்றன.

குளங்கள் தூர்வாரப்பட்டு மழை நீர்சேகரிக்கப்படும் போது விவசாய துறை எழுச்சிபெறும் நிலை உருவாகுவதுடன் நிலத்தடி நீரும் சேமிக்கப்படும் நிலைமை ஏற்படும். அதன்மூலம் காடுகள் வளர்க்கும் நடைமுறைகளை இலகுவாக முன்னெடுக்கமுடியும். அதேபோன்று எல்லைப் பகுதிகளில் காடுகளை அழித்து குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு முன்னெடுக்கும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்து அப்பகுதிகளிலும் காடுகளை வளர்க்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் யானை -மனித மோதலை தடுக்கும் முடியும் என்பதுடன் இயற்கை யினையும் பாதுகாக்கமுடியும்.

## மக்களைப் பீதியடையச் ... தொடர்ச்சி...

எல்லையை நாம் கடப்பதற்கு முன் 18 நாட்கள் என்பது "தாராளமான" காலம் என்று ஒரு மதிப்பீடு கூறுகிறது. மேலும், இருப்பு குறைப்பு நேர்கோட்டில் தொடரும் என்ற அனு மானத்தின் அடிப்படையிலேயே இது கூறப்படுகிறது.






இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்



